# மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்ட முன்னெடுப்புகள் கருவிலே சிதைவது ஏன்?

**புதிய ஜனநாயகம் வெளியீடு**

"**புரட்சிப்** பாதையில் முன்னேறும் போது சில நேரங்களில் பின்னடைவுகள், தியாகங்கள் தவிர்க்க முடியாதவை! புரட்சியாளர்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்; பாடங்களைப் பயின்று ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியாக மாற்றுவார்கள். இது புத்தகப் புழுக்களுக்கு புரியாது!"

இந்த வாசகத்தின் கடைசி வரி நம்மை ஆத்திரத்தோடும், கேலியாகவும் சாடுவதற்காக எழுதப்பட்டது. என்றபோதும், இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சி சார்பாக எழுதப்பட்ட இந்த வாசகத்தை நேரான பொருளில் எடுத்துக் கொண்டு நாம் வரவேற்போம். ஏனென்றால், நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் அரசுப் படைகளின் எதிர்ப்புரட்சி பாசிச பயங்கரவாத ஒடுக்குமுறைகளை அக்கட்சி சந்தித்து வருகிறது. ஆயுதக் குழுக்களில் உள்ள கீழ்மட்ட அணிகள் மட்டுமல்ல, மாநில அளவிலான தலைமைக் குழுத் தோழர்கள் உட்பட பலரும் கூட கைது செய்யப்படும் போதெல்லாம் "போலீசுடனான மோதல்" என்ற பெயரில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றனர்.

வேறு எந்தவொரு அரசியல் இயக்கத்துக்கும் எதிராக இல்லாதவாறு, இரகசியக் கொலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு இ.க.க. (மாவோயிஸ்ட்) புரட்சியாளர்கள் வேட்டையாடப்படுகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் ஆந்திராவில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பெண் புரட்சியாளர்கள் பாலியல் வன்முறை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இ.க.க.(மாவோயிஸ்ட்)வின் ஆதரவாளர்கள் என்பதற்காகவே சத்திஸ்கரில் சால்வாஜுடும், ஆந்திராவில் கொலைக் குழுக்கள் ஆகியவற்றின் வேட்டை நாய்கள் பழங்குடி மக்கள் மீது பாய்ந்து குதறுகின்றன.

இவ்வளவையும் எதிர்கொண்ட போதும், எல்லா இழப்புகள், தியாகங்கள், பின்னடைவுகளைச் சந்தித்தபோதும், ஆயுதப் போராட்டத்தின் மீதும் புரட்சியின் மீதும் மாளாத பற்றுறுதி காட்டி வருகிறது, இ.க.க (மாவோயிஸ்ட்). ஆகவே, அதற்கு ஏற்படும் இழப்புகளும், பின்னடைவுகளும் இந்தியப் புரட்சிக்கு ஏற்படும் இழப்பும் பின்னடைவும்தான் என்பதில் சந்தேகமில்லை. இந்த அக்கறையோடுதான் ‘‘மக்கள் அடித்தளத்தைப் பெறாமலேயே ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி விட்டதாகக் கூறுவது சிறுபிள்ளைத்தனம் என்பதை விளக்கத் தேவையில்லை‘‘ என்று இ.க.க.(மாவோயிஸ்ட்)யின் செயலுத்தியை அரசியல் ரீதியாக நாம் விமர்சித்தோம். ஆனால் அவர்களோ, அதை ‘‘ஏளனத்துடன் எக்காளமிட்டு எழுதுவதாக‘‘ப் புரிந்து கொள்கிறார்கள்.

## பு.ஜ.வின் விமர்சனங்களும் மாவோயிஸ்டுகளின் வசவுகளும்

**பெரியகுளம்** முருகமலை சம்பவத்தை ஒட்டி, புதிய ஜனநாயகம் எழுதியிருந்த கட்டுரைக்கு, ‘‘பெரிய குளத்தில் தெறித்த சிறு பொறி! அரசின் அலறலும் புதிய ஜனநாயகத்தின் புலம்பலும்‘‘ என்ற பெயரில் அறிவொளி என்பவர் எழுதி, ‘‘மனிதன் பதிப்பகம்‘‘ ஒரு வெளியீடும், ‘‘ஆயுதப் போராட்ட அரசியலும், நடைமுறையும் அச்சுறுத்துவது அரசை மட்டுமல்ல, மா.அ.க.வையும் தான்...‘‘ என்ற பெயரில், இ.க.க. (மாவோயிஸ்ட்)வின் ‘‘போராளி வெளியீடு‘‘ ஒன்றும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

‘‘அரசியல் வேறுபாடுகள், விமர்சனங்கள் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் மாவோயிஸ்டுகள் அதை வரவேற்கின்றனர். ஆரோக்கியப்பூர்வமான விவாதத்தை மேற்கொள்ளத் தயாராக உள்ளனர்‘‘ என்று ‘‘போராளி‘‘ வெளியீடு கூறுகிறது. ஆனால், அவர்களின் ஆரோக்கியப்பூர்வமான விவாதமும், விமர்சன வரவேற்பும் எத்தகையது என்பதை இந்த இரு வெளியீடுகளும் மிகத் தெளிவாகச் சொல்லி விடுகின்றன.

‘‘ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்‘‘ என்ற அகந்தைஆணவம் காரணமாக நமது அரசியல் விமர்சனங்களை சகித்து கொள்ளவும் எதார்த்தமாக எடுத்துக் கொள்ளவும் மறுக்கும் அவர்கள், ‘‘பெரிய குளத்தில் தெறித்த சிறு

பொறி!...'' என்ற வெளியீட்டில் புதிய ஜனநாயகத்தினரைப் பார்த்துப் பின்வருமாறு ஆத்திரத்தைக் கொட்டியுள்ளார்கள்.

அரசியல் நேர்மை இல்லாதவர்கள், நவீனகோயாபல்ஸ்கள், அரசியல் பிக்பாக்கெட்டுகள், மோடி மஸ்தான் வேலை செய்பவர்கள், மாப்பிள்ளைமார் போராட்டம் நடத்துபவர்கள், மாவோயிஸ்ட்களின் செயலை அரசு பயங்கரவாதத்துடன் சமன்படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபடுபவர்கள், அரசின் ஒடுக்குமுறைக்கு ஒத்தூதும் ஈனத்தனமானவர்கள், சரடு விடுகிறவர்கள், வடிகட்டிய பொய்யைப் பரப்புபவர்கள், அரசின் ஊதுகுழலாக செயல்படும் இழிவான செயலுக்குரியவர்கள், எத்துவேலை செய்பவர்கள், சட்டவாதத்தில் மூழ்கிப் போன காகிதப் புலிகள், புத்தகக்கடை போட்டு வியாபாரம் செய்பவர்கள், மாவோயிஸ்ட்கள் மீது விஷத்தைக் கக்குபவர்கள், எளிய உண்மைக் கூட தெரியாத ``மாமேதைகள்', பின்னடைவுகளையும், தியாகங்களையும் கண்டு ஒப்பாரி வைப்பவர்கள், பாடங்களைப் பயின்று ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியாக மாற்றுபவர்கள் புரட்சியாளர்கள் என்பதைப் புரியாத புத்தகப் புழுக்கள், தமது சந்தர்ப்பவாதத்தை மூடி மறைப்பதற்காகத்தான் மாவோயிஸ்ட்களின் நடைமுறையை விமர்சிக்கிறார்கள், பார்ப்பனர்கள் வேதபாராயணம் செய்வதைப் போல வெறும் மார்க்சியலெனினியமாவோ சிந்தனைகளை உதட்டளவில் பேசுபவர்கள், இவர்களைக் கண்டு அரசு அச்சப்படுவதில்லை, அரசின் அடக்குமுறைகள் இவர்களைத் தீண்டாத அதேசமயம் அரசின் அடக்குமுறை ஏவப்படுமோ என்றஞ்சி புதிய ஜனநாயகம் புலம்புகிறது என்கிறார்கள்.

இவ்வளவு அர்ச்சனைகள் வசைபாடுதல்களுக்கும் ஒருபடி மேலே போய் இ.க.க (மாவோயிஸ்ட்) சார்பாக வெளியிட்டுள்ள ``போராளி வெளியீடு'', புதிய ஜனநாயகம் அமைப்பின் விமர்சனங்களுக்கு பதிலளிப்பது என்கிற பெயரில் ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்திருக்கிறது. புதிய ஜனநாயகத்தின் விமர்சனங்களை எல்லாம் அவதூறுகள், பொய்கள் என்று நிராகரிக்கும் அதேசமயம், அவையெல்லாம் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக அரசும் ஆளும் வர்க்கமும் அவற்றின் ஏவல்நாய்களான போலீசும் கொடூரமான பயங்கரவாத ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடும்போதெல்லாம் அவற்றுக்குத் துணைபோவதாகவும், அவற்றுக்குச் சமமாகத் தாக்குதல் தொடுத்து, ஒத்துழைப்பதாகவும் குற்றஞ்சாட்டுகிறது.

``அரசின் / போலீசின் அடக்குமுறைகள், அவதூறுப் பிரச்சாரங்களுக்கு ஒத்திசைவாக, தம்மை நக்சல்பாரிகள், புரட்சியாளர்கள் எனக் கூறிக் கொண்டு

வலது சந்தர்ப்பவாத சகதியில் உருண்டு, புரண்டு, நெளிந்து கொண்டிருக்கும் இ.க.க.(மா.லெ) மாநில அமைப்புக் கமிட்டி தனது பங்கிற்கு ''அரசியல்தத்துவார்த்த ரீதியில்' மாவோயிஸ்டுகளை எதிர்த்து விமர்சனம் என்ற பெயரில் அவதூறுகளை அள்ளி வீசுவதும் ஒரு தொடர்கதைப் போல் நடைபெறுகின்றது.''

''மாவோயிஸ்ட் கட்சியையும் அதன் செயல்பாடுகளையும் எதிர்ப்பதை, இந்த அமைப்புகள் அனைவரும் (மாநில அமைப்புக் கமிட்டி உட்பட) ஒரு முக்கியமான ''கடமையாக' கொண்டுள்ளனர். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அந்த ''கடமையை' செய்ய இவர்கள் தவறுவதில்லை. பழம்பெரும் திரிபுவாதிகளான சி.பி.எம். சமீபத்திய திரிபுவாதிகளான விடுதலை, செங்கொடி போன்ற ''மாலெ' கட்சிகள், திரிபுவாதத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையே ஊசலாடும் மா.அ.க. போன்ற வலது சந்தர்ப்பவாதிகள் போன்ற அனைவரும் மாவோயிஸ்டுகளின் பயங்கரவாதத்தை, தீவிரவாதத்தை, சாகசவாதத்தை எதிர்த்து தாக்குதல்களை நடத்தி வருவது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.''

(பு.ஜ.) ''கட்டுரையின் முற்பகுதி அரசின் மற்றும் போலீசின் அடக்கு முறையை எதிர்த்து எழுதப்பட்டிருந்தாலும், அதன் பிற்பகுதி மற்றும் முடிவு மாவோயிஸ்டுகளின் அரசியல் மற்றும் செயலுத்திகளை விமர்சிப்பது என்ற பெயரில் பொய்களையும், அவதூறுகளையும் அள்ளிவீசி, ராமனுக்கு அணில் செய்த சேவையைப்போல ஆளும் வர்க்க அவதூறு பிரச்சாரத்தில் தனது பங்கைச் செலுத்தியுள்ளது. அரசியல் வேறுபாடுகள், விமர்சனங்கள் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் மாவோயிஸ்டுகள் அதை வரவேற்கின்றனர். ஆரோக்கியப்பூர்வமான விவாதத்தை மேற்கொள்ளத் தயாராக உள்ளனர். ஆனால், இ.க.க.(மாலெ) மா.அ.க.வும், புதிய ஜனநாயகமும் அத்தகைய ஆரோக்கியப்பூர்வமான விவாதத்தை மேற்கொள்வதற்கு பதிலாக, தமது அரசியல் ஓட்டாண்டித்தனத்தை மறைத்துக் கொள்ள பொய்களையும், அவதூறுகளையும் கூறி மாவோயிஸ்ட் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.''

''இந்த அமைப்பும், அதன் பத்திரிகையும் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுவதும், நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி முதல் தடவையல்ல. எப்போதெல்லாம் அரசு அடக்குமுறை திட்டமிட்ட வகையில் நமது அமைப்பையும் இயக்கத்தையும் ஒழிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறதோ, அப்போதெல்லாம் இவர்களும் தங்களின் பங்கிற்கு வரிந்துக் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி விடுகிறார்கள்................ விமர்சனம் என்ற பெயரில் படுமோசமான, கீழ்தரமான, அவதூறுகளையும், பொய்களையும்

கூறியிருந்தனர்......... மீண்டும் அரசு அதன் கொலைப் படையான அதிரடிப்படையை சேர்ந்த நூற்றுக்கணக்கான போலீசாரை நிரந்தர அடிப்படையில் மேற்கு தொடர்ச்சி மலையின் பல பகுதிகளில் முகாமிட்டு தேடுதல் வேட்டையும், அவதூறு பிரச்சார தாக்குதல் நடத்தியும், உளவாளிகளை ஊடுருவச் செய்தும் தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டுள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள மாவோயிஸ்ட் இயக்கத்தைப் பற்றி மட்டுமல்லாது, அனைத்திந்திய அளவில் பல மாநிலங்களில் முன்னேறிக் கொண்டிருக்கும் இயக்கத்தைப் பற்றியும் அண்டப் புளுகு, ஆகாசப் புளுகுகளைக் கூறி கொச்சைப்படுத்தும், சிறுமைப்படுத்தும், கீழ்தரமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.'' (போராளி வெளியீடு, பக். 36)

பெரியகுளம் முருகமலை சம்பவத்தைத் தொடர்ந்து ``புதிய ஜனநாயகம்'' எழுதிய கட்டுரைக்குப் போராளி, அறிவொளி மூலமாக மாவோயிஸ்டுகள் வெளியிட்டுள்ள மேற்கண்ட பதிலுரைகளில் மீண்டும் மீண்டும் அவர்கள் சொல்லுபவை இவைதாம்....

☆ அரசின் / போலீசின் அடக்குமுறைகள், அவதூறுப் பிரச்சாரங்களுக்கு ஒத்திசைவாக புதிய ஜனநாயகம் அமைப்பினர் தனது பங்கிற்கு ``அரசியல் தத்துவார்த்த ரீதியில்' மாவோயிஸ்டுகளை எதிர்த்து விமர்சனம் என்ற பெயரில் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர்.

☆ வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மாவோயிஸ்ட் கட்சியையும் அதன் செயல்பாடுகளையும் எதிர்ப்பதை ஒரு முக்கியமான ``கடமையாக'க் கொண்டுள்ளனர்.

☆ மாவோயிஸ்டுகளின் அரசியல் மற்றும் செயலுத்திகளை விமர்சிப்பது என்ற பெயரில் பொய்களையும் அவதூறுகளையும் அள்ளி வீசி ராமனுக்கு அணில் செய்த சேவையைப் போல் ஆளும் வர்க்க அவதூறுப் பிரச்சாரத்தில் தனது பங்கை செலுத்தியுள்ளது.

☆ ஆரோக்கியப்பூர்வமான விவாதத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக, தமது அரசியல் ஒட்டாண்டித்தனத்தை மறைத்துக் கொள்ள பொய்களையும் அவதூறுகளையும் கூறி மாவோயிஸ்ட் கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

☆ எப்போதெல்லாம் அரசு அடக்குமுறை திட்டமிட்ட வகையில் நமது அமைப்பையும் இயக்கத்தையும் ஒழிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறதோ, அப்போதெல்லாம் இவர்களும் தங்களின் பங்கிற்கு வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி விடுகிறார்கள். விமர்சனம் என்ற பெயரில் பு.ஜ.வினர் படுமோசமான, கீழ்த்தரமான, அவதூறுகளையும், பொய்களையும் கூறுகின்றனர்.

☆ தற்போது மீண்டும் தமிழக அரசு அதன் கொலைப் படையான அதிரடிப்படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போலீசாரை நிரந்தர அடிப்படையில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல பகுதிகளில் முகாமிட்டு தேடுதல்வேட்டையும் அவதூறு பிரச்சார தாக்குதல் நடத்தியும், உளவாளிகளை ஊடுருவச் செய்தும் தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள மாவோயிஸ்டுகள் இயக்கத்தைப் பற்றி மட்டுமல்லாது, அனைத்திந்திய அளவில் பல மாநிலங்களில் முன்னேறிக் கொண்டிருக்கும் இயக்கத்தைப் பற்றிய அண்டப் புளுகு, ஆகாசப் புளுகுகளைக் கூறி கொச்சைப்படுத்தும், சிறுமைப்படுத்தும், கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இ.க.க.(மாவோயிஸ்ட்)வுக்கு எதிரான முந்தைய அல்லது தற்போதைய விமர்சனங்களில் ஏதாவது ஒன்றைக்கூட படுமோசமானது, கீழ்த்தரமானது, கொச்சைப்படுத்துவது, சிறுமைப்படுத்துவது என்றும் அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு, அவதூறு, பொய் என்றும் அவர்களால் குறிப்பாக எடுத்துக்காட்டி விளக்கவோ நிரூபிக்கப்படவோ இல்லை. அதற்கு மாறாக அரசியல் பிக்பாக்கெட்டுகள், நவீன கோயபல்ஸ்கள், காற்றடைத்த பைகள் என்ற வசவுகள்; அதைவிட முக்கியமாக நாடாளுமன்ற சகதியில் மூழ்கிப் போயுள்ள போலி புரட்சியாளர்களோடும், அரசு / போலீசின் தாக்குதல்களோடும், எதிர்ப்புரட்சிப் பிரச்சாரத்தோடும் சோ, இந்து, தினமலர் முதலிய பார்ப்பனப் பத்திரிக்கைகளோடும் பு.ஜ.வை அடையாளப்படுத்துவதன் மூலம் மிகவும் மோசமான, கீழ்த்தரமான, கொச்சையான, சிறுமைப்படுத்தும் செயல்களில் இ.க.க. (மாவோயிஸ்ட்)யினர்தாம் ஈடுபட்டுள்ளனர்.

## எதிரிக்கு ஒத்திசைவாக அமைவது மாவோயிஸ்டுகளின் செயலா? பு.ஜ.வின் விமர்சனங்களா?

**உண்மையில்** அரசின் / போலீசின் அடக்குமுறைகள், அவதூறுப் பிரச்சாரங்களுக்கு ஒத்திசைவாக இருப்பது மாவோயிஸ்டுகளின் செயலுத்திகளும் நடைமுறையும்தானே தவிர, புதிய ஜனநாயகம் அமைப்பின் விமர்சனங்கள் அல்ல என்பது காரண காரியங்களைப் பகுத்தறிவு கொண்டு சற்று சிந்திக்கத் தெரிந்த அனைவரும் ஒப்புக் கொள்வர்.

''காவல் துறையினரே கூறுகின்றனர்: தமிழகத்தில் மாவோயிஸ்டுகள் பெரிய அளவில் வளர்ந்து விடவில்லை. எண்ணிக்கையில் சிலரே உள்ளனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் சுடுவதற்குப் பயன்படாத சாதாரண ஆயுதங்கள். ஷ இப்படியெல்லாம் மதிப்பீடு செய்யும் இந்தக் காவல்துறை ஏன் இப்படி மாவோயிஸ்டுகளால் மிகப் பெரிய ஆபத்து என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். தேடப்படும் நக்சலைட்டுகளின் தலைக்கு லட்சக்கணக்கில் விலை வைத்து சட்ட விரோதமாக அவர்களின் புகைப்படத்தை வெளியிட்டு, மக்களுக்காகப் போராடும் அர்ப்பணிப்பு உணர்வுள்ள அத்தோழர்களைக் கொடிய குற்றவாளிகளைப் போல படம் போட்டுக் காட்டி அவர்களைக் கோர முகத்துடன் சித்தரிப்பது ஏன்? (பெரிய குளத்தில்..., பக். 56)

நக்சல்பாரிகள் எப்படிப்பட்டவர்கள், எந்த நோக்கத்திற்காகவெல்லாம் போராடுபவர்கள்; எதற்காகவெல்லாம் குரல் கொடுப்பவர்கள்; என்னென்ன பிரச்சினைகளுக்காகவும், இலட்சியத்திற்காகவும் போராடி எவ்வாறெல்லாம் தியாகங்களைச் செய்வார்கள் என்று பட்டியலிட்டுவிட்டு அறிவொளி எழுதுகிறார், ''இவர்களைத்தான் கொடூரமுகம் கொண்டவர்களாக கொடிய தீவிரவாதிகளாக சித்தரித்துக் காட்ட முயல்கின்றனர். பஞ்சமா பாதகர்களாக ஆளும் வர்க்க பாதந்தாங்கிகளான காக்கிச் சட்டை ரவுடிகள் ஆளும் வர்க்கங்களின் ஊதுகுழல்களாக சோரம்போன முதலாளித்துவச் செய்தி ஊடகங்கள் இதே பிம்பத்தை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக மானவெட்கமின்றி போலீசின் கூற்றுக்களை அப்படியே வாந்தியெடுத்து தங்களின் எஜமான விசுவாசத்தைக் காட்டும் நாய்களாகச் செயல்படுகின்றனர்.''

''எதிரிகளான ஆளும் வர்க்க அயோக்கியர்களின் கொலைகார காவல்துறை அதிகாரிகள் அவர்களின் பாதந்தாங்கிகளான பத்திரிக்கைகள் ஆகியவற்றின் அவதூறுகளை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.''

"அவற்றின் நோக்கம் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் நிலவும் சமூக அமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான்" (பெரிய குளத்தில்..., பக்.6) எதிரிகளின் மேற்கண்ட அவதூறுகளையும் நோக்கத்தையும் புரட்சியின் ஆதரவாளர்களாலேயே புரிந்து கொள்ள முடியும்! ஆனால், தமிழ்நாட்டில் ஆயுதப் போராட்டம் மூலம் புரட்சி நடத்தப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கும் ஒரு தலைமைக்கு இவற்றைப் புரிந்து கொள்வது மட்டும் முக்கியமானதா? போதுமானதா? மாவோயிஸ்டுகளின் செயலுத்தியும் செயல்பாடுகளும் எதிரிகளின் இந்த அவதூறுகளுக்கும் நோக்கத்துக்கும் ஒத்திசைவாக வசதி செய்து கொடுப்பதாக அமைந்திருக்கிறதா அல்லது அவற்றை முறியடிப்பதாக அமைந்திருக்கிறதா என்பதைப் புரிந்து கொள்ள வேண்டாமா?

பெரியகுளம் முருகமலை சம்பவம் பற்றி வெளியே என்னதான் விளக்கமும் விவாதமும் நீட்டி முழக்கினாலும், மாவோயிஸ்ட் கட்சிஉள்ளே தயாரித்துள்ள உட்கட்சி மீளாய்வு மேற்கண்ட கேள்விகளுக்கு உண்மையான பதிலை உள்ளடக்கியிருக்கிறது.

"ஊத்தங்கரை சம்பவத்தைப் போலவே தற்போதும் பயிற்சி முகாம் நடத்தும் சமயத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதால், ஏன் மீண்டும் இத்தகைய தவறுகள் நிகழுகின்றன என்ற கேள்வி அனைவரின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. ஒருவேளை மக்கள் அடித்தளம் நமக்கு பலவீனமாக இருப்பதால் இந்தச் சம்பவம் நடந்திருக்குமோ என நினைப்பவர்களும் உண்டு."

"அப்பகுதியில் அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காகவோ வெளிப்படையாகவோ அல்லது தலைமறைவாகவோ நமது கண்ணோட்டப் பகுதியில் மக்களை அணிதிரட்டி நாம் இன்னும் எந்தப் போராட்டத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ செய்யவில்லை. மாறாக, ரகசியமாக ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவாளர்களையும் இளைஞர்களையும், கட்சிக் கருக்குழுக்களையும் அணிதிரட்டி வருகிறோம்." ங்ஆதாரம்: இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழு தயாரித்த பெரிய குளம் மீளாய்வு அறிக்கைசி.

மாவோயிஸ்ட் கட்சியின் மேற்கண்ட மீளாய்வு அறிக்கையே தன்னளவில் போதுமானது. "அந்தப் பகுதியில் அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது

வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காகவோ வெளிப்படையாகவோ அல்லது தலைமறைவாகவோ தமது கண்ணோட்டப் பகுதியில் மக்களை அணிதிரட்டி தாம் இன்னும் எந்தப் போராட்டத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ செய்யவில்லை.'' மாறாக இரகசியமாக ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவாளர்களையும், இளைஞர்களையும் கட்சிக் கருக்குழுக்களையும் அணிதிரட்டி வருகிறார்கள். அந்த நிலையிலேயே அந்தப் பகுதியில் ஆட்களையும், ஆயுதங்களைச் சேர்ப்பதிலும், ஆயுதப் பயிற்சி எடுப்பதிலும் ஈடுபட்டார்கள் என்பதை மாவோயிஸ்டுகளே ஒப்புக் கொள்கிறார்கள்.

மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு முன்பே ஆயுதப் பயிற்சியில் ஈடுபடுவதுதான் மாவோயிஸ்ட் கட்சியின் செயலுத்தியாகவும் செயல்பாடாகவும் இருந்திருக்கிறது. இவ்வாறு அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காகவோ வெளிப்படையாகவோ அல்லது தலைமறைவாகவோ அந்த பகுதியில் மக்களை அணிதிரட்டி, எந்தப் போராட்டத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ செய்யாது, இரகசியமாக ஆயுதங்களையும், ஆட்களையும் சேர்த்து ஆயுதப் பயிற்சியில் ஈடுபடும் ஒரு இயக்கத்தின் மீது தீவிரவாத முத்திரை குத்தி, அவதூறுப் பிரச்சாரங்களைச் செய்து அரசு பயங்கரவாத அடக்குமுறைகளை ஏவிவிடுவது ஆளும் வர்க்கங்களுக்கும் அரசுபோலீசுக்கும் வசதியாகவும் வாய்ப்பாகவும் அமைகிறது.

``மாவோயிஸ்ட் தீவிரவாதப் பிரச்சினை என்பது தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்களால் எழுப்பப்படும் சட்டம்ஒழுங்குப் பிரச்சினை; அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினை அல்ல; இது அரசுபோலீசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலான பிரச்சினையே தவிர மக்கள் பிரச்சினை அல்ல'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்வதற்கும் இது ஏதுவாக இருக்கிறது. இதனால், உண்மை அறியாத பொது மக்களிலேயே சிலர் போலீசுக்கு உதவியாகச் செயல்படுவதும் நடந்து விடுகிறது. (முன்பு தர்மபுரி ஊத்தங்கரையிலும், தற்போது பெரியகுளம்முருகமலையிலும் இவ்வாறு நடந்ததாக மாவோயிஸ்டுகளே ஒப்புக் கொள்கிறார்கள்.)

அதன்பிறகு மாவோயிஸ்டுகள் போய், ``மாவோயிஸ்டுகள் யார்? அவர்களுடைய கொள்கை என்ன? ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள் என்பதை மக்களுக்கு விளக்கிப் புரிய வைக்க வேண்டும்'' என்ற நிலை ஏற்படுகிறது. இதைத்தான் ``இந்த நிலையில் இருக்கும் ஒரு அமைப்பு, ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி விட்டதாகக் கூறுவது சிறுபிள்ளைத்தனம்'' என்று பு.ஜ. எழுதியிருந்தது.

இவ்வாறு அரசு / போலீசின் அவதூறுப் பிரச்சாரத்துக்குத்தாமே வாய்ப்பளித்து விட்டு, பிறகு மக்களுக்கு விளக்கமளிக்கும் இந்தச் செயலைப் பின்வருமாறு நியாயப்படுத்துகின்றனர். ``பெரியகுளம் நிகழ்வை ஒட்டி அரசும் தொலைகாட்சிகளும், முதலாளியச் செய்தி ஊடகங்களும் மாவோயிஸ்டுகளை ஆயுதமோகம் கொண்ட இரத்தக் காட்டேரிகளைப் போலச் சித்தரிக்கும் ஒரு இழிவான பிரச்சாரத்தில் இறங்கியுள்ள இந்த வேளையில், அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையை நிறைவேற்றும் பொருட்டு வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையினைத்தான் புதிய ஜனநாயத்தினர் இப்படிக் குசும்புத்தனமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.'' (பெரிய குளத்தில் தெறித்த..., பக்.12)

தும்பைவிட்டு வாலைப் பிடிக்கும் தமது செய்கையைக் கடமையாக நிறைவேற்றுவதாகவும், இந்தத் தவறைச் சுட்டிக் காட்டும் புதிய ஜனநாயகத்தின் பொறுப்பான விமர்சனத்தைக் ``குசும்புத்தனம்'' என்றும் கிண்டலடிக்கிறார்கள், மாவோயிஸ்டுகள். அரசும் போலீசும் இவர்களுக்கு எதிராக அவதூறுகளும் பொய்ப் பிரச்சாரமும் செய்வதற்கு இவர்களே வாய்ப்பளிக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னால், இவர்களோ புதிய ஜனநாயகத்துக்கு எதிரான அவதூறுகளும் பொய்ப் பிரச்சாரமும் செய்கிறார்கள். ``மாவோயிஸ்டு இயக்கத்தின் மீது அரசின் ஒடுக்குமுறை ஏவப்படும்போது அரசு பயங்கரவாதத்துடன் சமப்படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபடுவார்களேயாயின் அது அரசின் ஒடுக்குமுறைக்கு ஒத்தூதும் ஈனத்தனமே ஆகும்'' என்கிறார்கள்.

அப்படி என்ன அரசு பயங்கரவாதத்துடன் மாவோயிஸ்டுகளை சமப்படுத்தும் பிரச்சாரத்தில் புதிய ஜனநாயகம் ஈடுபட்டு விட்டது? அப்படி என்ன அரசின் ஒடுக்குமுறைக்கு ஒத்தூதும் ஈனத்தனமான என்ன செயலில் புதிய ஜனநாயகம் ஈடுபட்டுவிட்டது? ``மக்களை அரசியல் ரீதியில் அணிதிரட்டி, மக்கள் ஆதரவைப் பெறாத இ.க.க.

(மாவோயிஸ்டு)யினர், ஆயுதப் போராட்டம் தொடங்கி விட்டதாக எண்ணிக் கொண்டு அதற்காக ஆட்களையும் ஆயுதங்களையும் சேர்ப்பதிலும், ஆயுதப் பயிற்சியில் ஈடுபடும் சாகசவாதச் செயல்களிலும் இறங்கியது தவறு'' என்று விமர்சித்து விட்டோம். அதற்காக, பல ஆண்டுகளாகியும் ஆயுதப் போராட்டத்தை தொடங்காமல் அதைக் கண்காணாத தூரத்திற்குத் தள்ளி வைத்து விட்ட வலது சந்தர்ப்பவாதிகளெனத் தாங்கள் கருதும் புதிய ஜனநாயகம் அமைப்பினர், தங்களைப் பற்றி இவ்வாறெல்லாம் விமர்சிப்பதைத்தான் ``அரசு

பயங்கரவாதத்துடன் சமப்படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபடுவது, அரசின் ஒடுக்குமுறைக்கு ஒத்தூதும் ஈனத்தனம்'' என்கிறார்கள், மாவோயிஸ்டுகள்.

## யார் நேர்மையானவர்கள்: பு.ஜ.வா, மாவோயிஸ்டுகளா? இதோ ஆதாரம்!

**அறிவு**, நாணயம், வாய்மை, நேர்மை ஆகிய புரட்சியாளருக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள் இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவிடம் கிடையாது என்பதை இதன் மூலம் நிரூபித்து விட்டார்கள். இந்த உண்மையை அவர்களின் ``பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி! அரசின் அலறலும் புதிய ஜனநாயகத்தின் புலம்பலும்!'' என்ற வெளியீடும் ``ஆயுதப் போராட்ட அரசியலும் நடைமுறையும்'' என்ற போராளி வெளியீடும் காட்டிக் கொடுத்துள்ளன.

புதிய ஜனநாயகத்தைப் பார்த்து இ.க.க. (மாவோயிஸ்ட்) எழுதுகிறது, ``இவர்களிடம் நாம் கேட்பதெல்லாம் எங்கே, எப்போது தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கப்பட்டு விட்டதாக மாவோயிஸ்டுகள் அறிவித்தார்கள் என்பதைத்தான். இதனை ஆதாரத்துடன் எடுத்துக்காட்டும் அரசியல் நேர்மை இவர்களுக்கு இருக்கிறதா? வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் மாவோயிஸ்டுகள் கூட இவ்வாறுதான் குறிப்பிட்டுள்ளனர். ``இக்கேடு கெட்ட சமூக அமைப்பை ஒழிக்க மக்கள் படை கட்டுவதும், மக்கள் யுத்தத்தை தொடுப்பதும் நியாயமானது, நீதியானது! இது தமிழகத்திலும் தொடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அவசர அவசியமானதும் கூட! தமிழகத்தில் இத்தகைய மக்கள் யுத்தத்திற்கான தயாரிப்பில்தான் மாவோயிஸ்ட் கட்சி ஈடுபட்டுள்ளது. அதைத்தான் தீவிரவாதம் எனக் காட்டி மக்களை ஏய்க்க நினைக்கிறது கருணாநிதி அரசு'. இவ்வாறு தமிழகத்தில் தயாரிப்புக் கட்டத்தில்தான் இருப்பதாக கூறும்போது தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கி விட்டதாக கதையளக்கிறார்கள் இந்த நவீன கோயபல்ஸ்கள்.'' (பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி..., பக். 12)

``தர்மபுரி மக்கள் செல்வாக்கு பெருகியுள்ள பகுதியாக மதிப்பிடப்படுகிறதே

தவிர, அம்மாவட்டம் ஓர் ஆயுதப் போராட்ட முனையாக உருவாகிவிட்டது என்று மாவோயிஸ்ட்கள் வலிந்து என்றைக்குமே வாதாடியதில்லை. ஆனால் அப்படி வாதாடுவதாக ஒரு வடிகட்டிய பொய்யை இவர்கள் பரப்புவதின் நோக்கம் அரசின் ஊதுகுழலாகச் செயல்டும் இழிவான செயலே ஆகும்.'' (பெரிய குளத்தில்..., பக். 14)

மேற்கண்ட பத்திகளில் அவர்கள் கூறுவது என்ன?

☆ தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கப்பட்டு விட்டதாக மாவோயிஸ்டுகள் எங்கே, எப்போது அறிவித்தார்கள்? இதனை ஆதாரத்துடன் எடுத்துக் காட்டும் அரசியல் நேர்மை புதிய ஜனநாயகம் அமைப்பினருக்கு இருக்கிறதா?

☆ தமிழகத்தில் தயாரிப்புக் கட்டத்தில்தான் இருப்பதாக மாவோயிஸ்ட்கள் கூறும்போது, தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கிவிட்டதாக இந்த (புதிய ஜனநாயகம்) நவீன கோயபல்ஸ்கள் கதையளக்கிறார்கள்.

☆ தர்மபுரி மாவட்டம் ஓர் ஆயுதப் போராட்ட முனையாக உருவாகிவிட்டது என்று மாவோயிஸ்ட்கள் வலிந்து என்றைக்குமே வாதாடியதில்லை. ஆனால் அப்படி வாதாடுவதாக ஒரு வடிகட்டிய பொய்யை இவர்கள் (புதிய ஜனநாயகம்) பரப்புவதின் நோக்கம் அரசின் ஊதுகுழலாகச் செயல்படும் இழிவான செயலே ஆகும் என்கிறது இ.க.க. (மாவோயிஸ்ட்).

யார் அரசியல் நேர்மையுள்ளவர்கள்? யார் நவீன கோயபல்சுகள்? யார் வடிகட்டிய பொய்யைப் பரப்புகிறார்கள்? யார் இழிவான செயலில் ஈடுபடுகிறார்கள்? இ.க.க.(மாவோயிஸ்ட்) மாநிலக் குழுவா, புதிய ஜனநாயகமா என்பதைக் கீழ்க்கண்ட ஆதாரத்தைப் படித்துவிட்டுத் தோழர்களே முடிவு செய்து கொள்ளட்டும்!

இ.க.க.(மாவோயிஸ்ட்) மக்கள் யுத்தக் குழுவாக இருந்தபோது, அதன் 1995 சிறப்பு மாநாட்டின் தீர்மானத்தின் அடிப்படையில் 1996 அக்டோபரில் நடத்தப்பட்ட பிளீனத்தில் "தமிழகத்தில் ஆயுதப் போராட்ட முனையை உருவாக்குவோம்'', "உழவர் போராட்ட முனையை உருவாக்குவோம், உள்ளூர் ஆதிக்க சக்திகளை வீழ்த்துவோம்'', கிராம ஆட்சி மன்றங்களுக்கே அதிகாரம், கொரில்லா மண்டலத்தை நோக்கி முன்னேறுவோம்'' என்கிற முழக்கங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த முடிவின் அடிப்படையில்தான் தோழர்கள்

இரவீந்தர், சிவா போன்ற நகர்புறத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தோழர்களை வைத்து ஆயுதக் குழுக்கள் கட்டப்பட்டன.

அதன்பிறகு 2000, ஜனவரியில் தமிழ்நாடு ஆயுதப் போராட்ட முனைகளில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது.

"வடதெலுங்கானா தண்டகாரண்யா பகுதிகள் (மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம்) இன்று கொரில்லா மண்டலத்தின் உயர்ந்த கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. மேலும் தென் தெலுங்கானா, கிழக்கு மண்டலம் (ஆந்திரா, ஒரிசாவின் பகுதிகள்), இராயலசீமா தெற்கு கடற்கரை மண்டலம் (ஆந்திரா) கோயல்கெய்மூர் மண்டலம் (பீகார்) ஆகியன கொரில்லா மண்டலத் தயாரிப்புக் கட்டத்தில் உள்ளன. மேற்கு பெங்கால், தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களில் ஆயுதப் போராட்ட முனைகள் உருவாகி உள்ளன." (மக்கள் யுத்தக் குழுவின் போராளி, ஜனபிப் 2000, பக் 34.)

2000 ஜனவரியில் தோழர் இரவீந்தர் கொல்லப்பட்டதும், 2002 நவம்பரில் தோழர் சிவா கொல்லப்பட்ட ஊத்தங்கரை சுற்றி வளைப்பு நிகழ்வும் தற்காலிகப் பின்னடைவுகள்தாம் என்று கருதிய மக்கள் யுத்தக் குழு, ஆயுதக் குழுக்களைப் புதுப்பித்து ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் புரிதலிலேயே இருந்தது. அதனால்தான், அக்குழு 2006ஆம் ஆண்டு நடத்திய தனது 6வது மாநில மாநாட்டில் பின்வருமாறு முடிவு செய்தது.

"ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி தளப் பிரதேசங்களை அமைக்கும் கண்ணோட்டத்துடன் கொரில்லா மண்டலத்தை நோக்கி முன்னேறுவோம்."

"ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி அனைத்துத் தயாரிப்புகளையும் விரைந்து நிறைவேற்றுவோம்" (2006இல் நடந்த 6வது மாநில மாநாடு அரசியல் அமைப்பு மீளாய்வு, பக்.12)

மாநில மாநாட்டு முடிவுகளில் காணப்படும் உடனடிக் கடமைகளில் ஒன்றாக, "தமிழகத்தில் மீண்டும் "மக்கள் யுத்தத்தைத் தொடங்குவோம்' (பக். 62) என்பது முன் வைக்கப்பட்டிருக்கிறது. "ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்" என்று ஒரு இடத்திலும், "ஆயுதப் போராட்டத்தை மீண்டும் தொடங்குவோம்" என்று மற்றொரு இடத்திலும் இ.க.க.(மாவோயிஸ்ட்), மாநிலக் குழுவின் அரசியல் அமைப்பு மீளாய்வில்

முரண்பாடாக இருப்பதற்கு அவர்கள் தாம் விளக்கம் சொல்ல வேண்டும். ஆனால், ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம் என்றாலும் சரி, மீண்டும் தொடங்குவோம் என்றாலும் சரி, இரண்டுமே தமிழகத்தில் ஆயுதப் போராட்டம் தொடங்கியதாக இ.க.க.(மாவோயிஸ்ட்) மாநிலக் குழு பிரகடனப்படுத்தியதை உறுதி செய்கிறது.

ஆக, தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கப்பட்டு விட்டதாகவும், தமிழகம் ஓர் ஆயுதப் போராட்ட முனையாக உருவாகி விட்டதாகவும் மாவோயிஸ்டுகள் எப்போது, எங்கே அறிவித்தார்கள் என்பதை ஆதாரத்துடன் எடுத்துக் காட்டி நாம் நமது அரசியல் நேர்மையை நிரூபித்துள்ளோம். இப்போது அவர்கள் சொல்லட்டும். யார் அரசியல் நேர்மையற்றவர்கள்? யார் நவீன கோயபல்ஸ்கள்? யார் வடிகட்டிய பொய்யைப் பரப்புபவர்கள்? ஓர் உண்மையைச் சொன்னதற்காக, நாம் அரசின் ஊதுகுழலாக செயல்படும் இழிசெயலைச் செய்வதாக உள்நோக்கம் கற்பிப்பதும் அவதூறு செய்வதும்தான் அரசியல் நேர்மையான செயலா?

## மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்ட "நடிப்பு"

**புதிய** ஜனநாயகத்திற்கு எதிரான மேற்கண்ட அவதூறை நியாயப்படுத்தும் முயற்சியாக மாவோயிஸ்டுகள் தாங்கள் மட்டுமே ஆயுதப் போராட்டப் பாதையில் ஊன்றி நின்று சாதனை புரிந்து வருவதாகவும், நாம் ஆயுதப் போராட்டத்தை கண்காணாத தூரத்திற்குத் தள்ளிப் போட்டுள்ள வலது சந்தர்ப்பவாதிகளாக உள்ளதாகவும் "பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி..." வெளியீட்டில் புளுகித் தள்ளியிருக்கிறார்கள்.

அதேசமயம், இந்த வெளியீட்டில் மாவோயிஸ்டுகள் திரும்பத் திரும்ப வலியுறுத்தும் இன்னொரு முக்கியமான கருத்து (விசயம்) இதுதான்:
☆ "தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கப்பட்டு விட்டதாகவோ", "தர்மபுரி மாவட்டம் ஓர் ஆயுதப் போராட்ட முனையாக உருவாகி விட்டதாகவோ" மாவோயிஸ்டுகள் அறிவிக்கவும் இல்லை. அவ்வாறு அவர்கள் என்றைக்குமே வலிந்து வாதாடியதுமில்லை. (பக்.12, 14).

☆ தமிழகத்தில் ஆயுதப் புரட்சி தொடங்கப்பட்டு விட்டதாக மாவோயிஸ்டுகள்

அறிவித்தார்கள் என்று சொல்வது அரசியல் நேர்மையற்ற செயல்; தர்மபுரி மாவட்டம் ஆயுதப் போராட்ட முனையாக உருவாகிவிட்டது என்று மாவோயிஸ்டுகள் வலிந்து வாதாடுவதாகக் கூறுவது வடிகட்டிய பொய். (பக்.12)

☆ தமிழகத்தில் மாவோயிஸ்டுகள் தயாரிப்புக் கட்டத்தில்தான் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு மாறாக தமிழகத்தில் அவர்கள் ஆயுதப் புரட்சி தொடங்கி விட்டதாக நவீன கோயபல்ஸ்கள் (புதிய ஜனநாயகம்) கதையளக்கிறார்கள். (பக்.12)

☆ ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்ட முடியும் என்ற சூழலில்தான் அதற்கான தயாரிப்புகளில் (அதாவது 199697 ஆண்டு முதல் ஆயுதக் குழுக்களைக் கட்டும் முயற்சியில்) ஈடுபடத் தொடங்கியது மாவோயிஸ்ட் கட்சி. (பக்.13)

☆ அழித்தொழிப்பு காலத்தின் முதல் தியாகி அப்பு என்றால், போர்க்குணமுள்ள மக்கள் திரள் போராட்டங்களை நடத்திய கட்டத்தின் முதல் தியாகி பாலன் என்றால், ஆயுதப் புரட்சித் தயாரிப்பு காலத்தின் முதல் தியாகி தோழர் இரவீந்திரன். அதேபோல் ஊத்தங்கரையில் தற்காப்பு பயிற்சியில் ஈடுபட்ட தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பெரிய குளத்தில் நடந்துள்ளது, ஆயுதப் போராட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கிடையேயான ஒரு சிறிய நிகழ்வு. (பக். 1314)

ஆக, "பெரிய குளத்தில் தெறித்த சிறு பொறி!..." என்ற வெளியீட்டின் மூலம் மாவோயிஸ்ட்கள் சொல்லிக் கொள்ளும் ஒரு முக்கியமான கருத்து: "தமிழகத்தில் ஆயுதப் போராட்டம் தொடங்கி விட்டது," "ஆயுதப் போராட்ட முனை உருவாகியுள்ளது" என்பது கிடையாது. தமிழகத்தில் மாவோயிஸ்ட் கட்சி ஆயுதப் போராட்டத்திற்கான தயாரிப்புக் கட்டத்தில்தான் உள்ளது. ஆயுதப் போராட்டத் தயாரிப்பு நடவடிக்கைகளில்தான் அக்கட்சி ஈடுபட்டது. 2001 இரவீந்திரன் கொல்லப்பட்டது தயாரிப்புக் காலம்; 2003 ஊத்தங்கரை போலீசு சுற்றிவளைப்பு தற்காப்பு பயிற்சியில் ஈடுபட்ட காலம். 2007 பெரியகுளத்தில் ஆயுதங்களுடன் தோழர்கள் கைது செய்யப்பட்டது ஆயுதப் போராட்ட தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட காலம்.

இவையோ, இந்த காலகட்டத்தில் நடந்த வேறு எந்த நடவடிக்கைகளோ ஆயுதப்

போராட்டம் தொடங்கி விட்டதாகக் கொள்ளக் கூடாது. இவையெல்லாமே தயாரிப்பு நடவடிக்கைகள், முயற்சிகள் என்றுதான் கருதவேண்டும். இவ்வாறு இப்போது மாவோயிஸ்ட் கட்சி கூறுகிறது. சரி, இப்படியே எடுத்துக் கொள்வோம், ஏனென்றால், இதுதான் உண்மை!

அதாவது மாவோயிஸ்ட் கட்சியோ, அதன் முன்னோடியான மக்கள் யுத்தக் குழுவோ இதுவரை தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கவோ, தமிழகத்தில் ஒரு ஆயுத போராட்ட முனையை உருவாக்கவோ இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், அப்படிச் செய்துவிட்டதாக நம்பிக்கை கொண்டு அல்லது நம்ப வைத்துக் கொண்டு கற்பித்துக் கொண்டு ஆயுதக் குழுக்களைக் கட்டி, சில சாகசவாதச் செயல்களில் மாவோயிஸ்டுகள் ஈடுபட்டார்கள் என்பதுதானே புதிய ஜனநாயகத்தின் விமர்சனம்!

இந்த விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளாது மறுக்கும் அதேசமயம், மாவோயிஸ்ட் கட்சி இதுவரை தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கவோ, தமிழகத்தில் ஒரு ஆயுதப் போராட்ட முனையை உருவாக்கவோ இல்லை என்கிற உண்மையை இப்போது முதன்முறையாக ஒப்புக் கொண்டுள்ளது. அதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளில், முயற்சிகளில்தான் ஈடுபட்டது. அதைத்தான் தீவிரவாதம் என்று காட்டி ஒடுக்குகிறார்கள், பஞ்சமா பாதகர்களான ஆளும் வர்க்கப் பாதந்தாங்கிகளான காக்கிச் சட்டை ரவுடிகள் என்கிறார்கள், மாவோயிஸ்ட்கள்.

மாவோயிஸ்ட்களால் இப்போது முதன்முறையாக ஒப்புக் கொள்ளப்படும் இந்த உண்மை இன்னுமொரு உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விடுகிறது. அதாவது ‘‘நாங்கள் தாம் ஆயுதப் போராட்டப் பாதையை நடைமுறைப்படுத்தி சாதித்துக் காட்டியவர்கள், நக்சல்பாரி என்ற பட்டம் தங்களுக்கே உரியது; இதற்கு மாறாக புதிய ஜனநாயகம் அமைப்பினர் 30 ஆண்டுகளாகியும் ஆயுதப் போராட்டத்தைக் கண்காணாத தூரத்திற்கு தள்ளி வைத்துவிட்ட வலது சந்தர்ப்பவாதிகள்‘‘ என்ற மக்கள் யுத்தக் குழு மாவோயிஸ்டுகளின் வரையறுப்பு வெறும் அண்டப்புளுகு ஆகாசப் புளுகு என்ற உண்மையை அவர்கள் ஒப்புக் கொள்வதையே முதலில் சொன்ன உண்மை நிரூபிக்கிறது.

அதாவது சாருமஜூம்தார் தலைமையிலான ஒன்றுபட்ட இ.க.க.(மாலெ) கட்சியாக இருந்த காலத்திலிருந்து, கடந்த 37 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கான முயற்சிதான் நடைபெறுகிறது. ஆனாலும், இன்னமும் ஆயுதப் போராட்டம் தொடங்கிவிடவில்லை.

தங்களுடைய வழிதான் ஆயுதப் போராட்டத்துக்கான மிகச் சரியானது, ஆந்திராபீகார் நடைமுறையில் நிரூபித்துக் காட்டப்பட்ட வழி என்று கூறிக் கொள்ளும் தமிழக மாவோயிஸ்டுகளும், அவர்கள் பரம்பரை உரிமை பாராட்டும் கூட்டக்குழு மக்கள் யுத்தம் மாவோயிஸ்ட் பரம்பரையின் 32 ஆண்டு கால வரலாற்றிலும், தமிழகத்தில் எப்போதும் எங்கேயும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி விடவில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கான முயற்சிகளில் தயாரிப்பு நடவடிக்கைகளில்தான் ஈடுபட்டு வருகிறார்கள்.

``புதிய ஜனநாயகம்'' அமைப்புக்கு எதிரான தங்களுடைய ஒவ்வொரு பிரசுரத்திலும் மாவோயிஸ்ட்கள் தவறாது முக்கியமாகக் கூறிவரும் பிரச்சாரம்: ``புதிய ஜனநாயகம் அமைப்பினர் ஆயுதப் போராட்டத்தைக் கண்காணாத தூரத்துக்குத் தள்ளி போட்டுள்ள வலது சந்தர்ப்பவாதிகள்; அவர்களுடைய அரசியல்கோட்பாடே அப்படிப்பட்டதுதான்; அதனால்தான் இவ்வளவு ஆண்டுகளாகியும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்காமல், சட்டவாதப் போராட்டங்களை மட்டும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.''

சரி. ``புதிய ஜனநாயகம்''தான் இப்படி இருக்கிறது என்றே வைத்துக் கொள்ளுங்கள். அதைவிட அதிக ஆண்டுகளாக ஆயுதப் போராட்ட முயற்சியிலும் தயாரிப்பிலும் உள்ள மாவோயிஸ்டுகள் இன்னமும் ஆயுதப் போராட்டத்தைக் கைக்கெட்டும் தூரத்தில் இல்லாவிட்டாலும் கண்ணுக்கெட்டிய தூரத்திற்காவது கொண்டு வந்து விட்டார்களா? கீரிக்கும் பாம்புக்கும் சண்டை நடத்தப் போவதாகக் காட்டிப் பார்வையாளர்களை ஏய்க்கும் மோடி வித்தைக்காரனைப் போல புரட்சியை ஆதரிக்கும் பார்வையாளர்களிடம் ஆயுதப் போராட்ட ``நடிப்பு''க் காட்டிக் கொண்டு தானே இருக்கிறார்கள். அது ஏன்?

இதன் மூலம் உண்மையில் ஆயுதப் போராட்டத்தைக் கண்காணாத தூரத்திற்குத் தள்ளிப் போட்டிருப்பவர்கள் தமிழக மாவோயிஸ்டுகள்தாம் என்பது

தெளிவாகிறது! அதாவது, ஆயுதப் போராட்டத் தயாரிப்பு நடவடிக்கைகள் முயற்சிகளிலேயே நிரந்தரமாக இருப்பவர்கள்; ஆனால், ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க மாட்டார்கள். இந்த நிலைக்கான காரணத்தைக் கண்டறிய மறுப்பதோடு, ஆந்திரா, பீகாரைக் காட்டியே இங்கே சவடால் அடித்துக் கொண்டிருப்பார்கள். ஆந்திரா, பீகாரில் மாவோயிஸ்டுகள் நடத்தும் ‘‘ஆயுதப்போராட்டமும்‘‘கூட மாவோவின் மக்கள் யுத்தப் பாதையிலானது அல்ல. சேகுவாராவின் குட்டி முதலாளிய இராணுவவாதம்தான் என்பதைப் பிறகு பார்ப்போம்.

இவ்வளவு ஒரு நீண்டகாலத்துக்கு ஆயுதப் போராட்டத் தயாரிப்புகளில் ஈடுபடுவதை ஆயுதப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று ‘‘நடிப்புக் காட்டிக் கொண்டு‘‘ ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு அலைவதை புரட்சியாளர்களைப் ‘‘பலி‘‘ கொடுக்கும் செயல் என்று சொல்வதா, ‘‘ஆத்திரமூட்டி எதிரியின் தாக்குதலை வரவழைக்கும் வேலை‘‘ என்று சொல்வதா, மாவோயிச மக்கள் யுத்தைப் பாதை என்பதா?

இத்தகைய அரைகுறை ஆயுதப் போராட்ட முயற்சிகளின் விபரீதங்கள் எதிர்விளைவுகள் குறித்து லெனினியம் நிறையவே எச்சரித்திருக்கிறது. அதற்கு மாவோயிஸ்டுகள் நடைமுறை அனுபவ ரீதியிலான ஒரு எதிர்மறை சாட்சியமாக விளங்குகிறார்கள்.

ஏழாண்டுகளுக்கு முன்பே புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது: ‘‘பு.ஜ. அமைப்பு துவங்குவதற்கு முன்பிருந்தே, ‘‘ஆயுத‘‘ப் போராட்டத்தை துவங்கி விட்டதாகப் பீற்றிக் கொண்டிருந்த இந்த கூட்டக் குழு, ம.யு.வாரிசுகள் இவ்வளவு ஆண்டுகளில் அதைச் சாதித்தார்களா? தமிழ்நாட்டின் யதார்த்த நிலைமையைப் புரிந்து கொள்ளாத இவர்கள் திரும்பத் திரும்ப ‘‘ஆயுத‘‘ முயற்சி செய்வது கருக்கலைப்பிலேயே முடிந்தது. ஆந்திராவைக் காப்பி அடிக்க முயலுபவர்களுக்கு பு.ஜ.வின் வழிமுறைகளைப் புரிந்து கொள்ள முடியாதுதான்‘‘ (பு.ஜ. வெளியீடு, குறுக்குவழி தேடி... குழுசாகச வழிபாடு, பக்: 45).

## முதன்மைத் தவறும் ஆயுதக் குழுக்களும்

**ஆயுதப்** போராட்டத்தை எப்போது, எங்கு, எவ்வாறு தொடங்குவது என்பதைத் தீர்மானிக்கும் இடம், பொருள், கால அடிப்படையிலான காரணிகள் எவையெவை என்று மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையின் வழிகாட்டுதல்களைக் கொண்டு புதிய ஜனநாயகம் அமைப்பினர் வகுத்து வரையறுத்துக் கொண்டிருக்கின்றனர்; அவை அகநிலை விருப்பங்களால் தீர்மானிக்கப்பட முடியாது; அகநிலை கூறுகளாலும் அமைப்பு பலம் மற்றும் மக்கள் ஆதரவு மற்றும் புறநிலைக் கூறுகளாலும் புரட்சிக்கு சாதகமான மற்றும் ஆளும் வர்க்கங்களுக்குப் பாதகமான அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளாலும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஆனால், மாவோயிஸ்டுகளைப் பொறுத்தவரை, ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவது என்பது அகநிலை விருப்பங்களால் மட்டுமே தீர்மானிக்கக் கூடியது; இந்தியாவின் எந்த இடமாக இருந்தாலும் மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் எந்தவொரு சமயத்திலும் உடனடியாக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கான சாதகமான சூழ்நிலைகள் நிலவுவதாகவும், புரட்சிகரக் கட்சி என்ற பெயரில் நான்கைந்து பேர்கள் (அவர்கள் கூட புரட்சிக்குத் தலைமை தாங்கும் தகுதிகள் கொண்டவர்களா என்பது கூட முக்கியமில்லை) இருந்தால்போதும்; ஆயுதப் போராட்டத் தயாரிப்பில் ஈடுபட்டு, அதாவது ஆயுதங்தாங்கிய குழுக்களைக் கட்டி, ஆயுதப் போராட்டத்தில் குதித்து விடவேண்டியதுதான். இப்படிச் செய்யாதவர்கள் எல்லாம் வலது சந்தர்ப்பவாதிகள்தாம் என்கிறார்கள்.

இதற்காக மாவோ மேற்கோள்களைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ‘‘ஆயுதப் போராட்டமே முதன்மை போராட்ட வடிவமாகவும், முதன்மையாக விவசாயிகளைக் கொண்ட படையே முதன்மை அமைப்பு வடிவமாகவும் உள்ளது. ஏனெனில், ஜனநாயகமும், தொழில்துறையும் இல்லாத அரைக்காலனிய, அரை நிலவுடைமை சீனா ஒரு பரந்த, ஒத்த தன்மையற்ற நாடாகும் என சீனப் புரட்சியில் கிராமப்புற புரட்சிகர யுத்தத்தின் தொடக்க காலத்தின் போதே தோழர் மாசேதுங் சரியாகச் சுட்டிக் காட்டினார்.‘‘

இந்த மேற்கோளை எடுத்துக்காட்டி, உலகின் எல்லா காலனி, அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ நாடுகளிலும், ஆரம்பத்திலிருந்து எப்போதும் ஆயுதப் போராட்டம் பிரதான போராட்ட வடிவமாகும், இராணுவமே முதன்மை அமைப்பு வடிவமாகும் என்று குருட்டுத்தனமாகவும் மாசேதுங் சிந்தனைக்கு

விரோதமாகவும் திரித்துப் புரட்டுகிறார்கள், ``மாவோயிஸ்டுகள்'' என்று தங்களை அழைத்துக் கொள்ளுபவர்கள்.

``தோழர் மாவோ கூறியதைப் போல, உள்நாட்டில் ஜனநாயகமில்லாத, வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு அரைக்காலனி அரைநிலவுடைமை நாடாகவே உள்ளது. எனவே இங்கு நீண்டகாலம் சட்டபூர்வமான ஆயுதப் போராட்டத்திற்கு மக்களைத் தயார் செய்வது சாத்தியமில்லாத (அது என்ன சட்டபூர்வமான ஆயுதப் போராட்டம் என்பது மாவோயிஸ்டுகளுக்கே வெளிச்சம்பு.ஜ.) இங்குள்ள நிலைமைகளுக்குப் பொருந்தாத வடிவமாகும். இங்கும் தொடக்கத்திலிருந்தே ஆயுதப் போராட்டத்தின் மூலம் மக்களை அணிதிரட்டி, புரட்சிகர யுத்தத்தை வளர்த்தெடுத்து, பகுதியளவில் அதிகாரத்தைக் கைப்பற்றி அதனை பரந்த பகுதிகளுக்கு விரிவுபடுத்தி, நகரங்களை சுற்றி வளைத்து நாடளவில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். ஆதலால் இங்கும், சீனத்தைப் போல யுத்தம் முதன்மை போராட்ட வடிவமாகவும், இராணுவம் முதன்மை அமைப்பு வடிவமாகவும் உள்ளது.'' ஙபக்.32 ``வலது சந்தர்ப்பவாத கருத்துக்களை முறியடிப்போம், நீண்டகால மக்கள் யுத்தப் பாதையை உயர்த்திப் பிடிப்போம்'' என்ற பெயரில் இ.க.க. (மாவோயிஸ்ட்) மாநிலக் குழு, தமிழ்நாடு சார்பாக தேதி குறிப்பிடாமல் வெளியிடப்பட்ட உட்கட்சி ஆவணம்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், கோட்பாடு ரீதியாகவே, ``தொடக்கத்திலிருந்தே ஆயுதப் போராட்டத்தின் மூலம் மக்களை அணிதிரட்ட வேண்டும்; இங்குள்ள நிலைமைகளுக்கு அதுதான் பொருத்தமான வடிவமாகும்'' என்பதுதான் மாவோயிஸ்டுகளின் கண்ணோட்டமாகும். மேலும், அடிக்கோடிட்ட வாசகத்தை மீண்டும் படியுங்கள். தொடக்கத்திலிருந்தே மக்களை அணிதிரட்டுவது ஆயுதப் போராட்டத்தின் மூலம்; மக்களை அணிதிரட்டத் தொடங்கும் போதே, புரட்சிகர யுத்தமும் தொடங்கி விடுகிறது என்கிறார்கள்; அதனால்தான் அடுத்த சொற்களில் ``புரட்சிகர யுத்தத்தை வளர்த்தெடுப்பது'' என்று தொடர்கிறார்கள்.

இதுவே அவர்களின் கோட்பாடு ரீதியிலான புரிதலாக இருப்பதால்தான் நடைமுறையிலும் மக்களைத் திரட்டுவதற்கு முன்பே ஆயுதக் குழுக்களைக் கட்டுவதில் இருந்து புரட்சிகரப் பணிகளைத் தொடங்குகிறார்கள். இதைத்தான் ஆயுதப் போராட்டத்திற்கான தயாரிப்பு நடவடிக்கைகள் முயற்சிகள் என்கிறார்கள். ஆயுதந்தாங்கும் இந்தக் குழுக்களின் வேலைகள் என்ன?

போலீசு எதிரியின் கண்ணில் படாதவாறும், தாங்கள் கணிப்பின்படியான பாதுகாப்பானதாகவும் இருக்கும் சிறு கிராமங்களில் (கொட்டாய்களில்) ஒரு சில மக்களிடம் பாட்டுப்பாடி பிரச்சாரம் செய்வது, இல்லையானால் ஆயுதக் குழுக்களை விரிவடையச் செய்யும் நோக்கில் "குசுகுசு" பிரச்சாரம் செய்வது; இதற்கு ஆயுதங்களைக் கவர்ச்சிக் கருவிகளாகப் பயன்படுத்துவது; போலி மோதல் படுகொலைகளுக்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவும் மக்களைப் பாதிக்கும் உள்ளூர் பொதுப் பிரச்சினைகளுக்காக மக்கள் பங்கேற்பின்றி ஆயுதக் குழுக்களாகவே செய்தி ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் அரசு இலக்குகளைத் தாக்கி அழிப்பது; மற்ற சமயங்களில் ஆயுதப் பயிற்சியும், தங்களைத் தாங்களே பராமரித்துப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு அலைந்து திரிவதும் ஆயுதந்தாங்கிய குழுக்களின் வேலைகள்.

ஆந்திராவில் ஜக்தியால், சிர்சில்லா தாலூக்காக்களில் நடத்தப்பட்ட போராட்டங்கள் அடக்குமுறைக்குள்ளானபோது வடதெலுங்கானாவின் மலைப்பகுதிகளுக்குத் தப்பியோடித் தஞ்சம் புகுந்த மக்கள் யுத்தக் குழுவின் அணிகள், முதன்முறையாகச் சில ஆயுதக்குழுக்களாகக் கட்டப்பட்டு மேற்கண்ட நடைமுறையை மேற்கொண்டனர்; அதற்கு முன்பிருந்தே இந்த அணுகுமுறையைப் பீகாரில் மாவோயிசக் கம்யூனிஸ்ட் மையத்தினர் நடைமுறைப்படுத்தி வந்தனர். பிறகு தண்டகாரண்யா, மகாராட்டிரம், ம.பி., ஒரிசா என்று தமது ஆயுதக் குழுச் செயல்பாடுகளை விரிவுபடுத்தினர்.

இத்தகைய நடைமுறை புவியியல், பலவீனமான அரசு இயந்திரம் போன்ற சில தனிச்சிறப்பான காரணங்களால் சட்டீஸ்கர், பீகார்,ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் இன்னமும் தாக்குப் பிடித்திருக்க முடிகிறது. ஆனால், இந்த நடைமுறையை பொது விதியாக உயர்த்தி செயல்படுத்த முயன்று தமிழ்நாடு, கர்நாடகா, மகாராட்டிரம், மேற்கு வங்கம், அசாம் ஆகிய பிற மாநிலங்களில் மட்டுமல்ல, ஆந்திராவிலேயே கூட இழப்புகளையும் பின்னடைவையும் தேக்கத்தையும்தான் சந்தித்திருக்கிறார்கள்.

இந்த அனுபவங்களில் இருந்து பாடங்கற்றுக் கொள்ள மறுப்பதோடு, ஆந்திராவில் தங்கள் இயக்கம் இன்னமும் மாபெரும் வெற்றிகளை ஈட்டி வருவதாகவும், அதேபோன்ற நடைமுறையை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்றும் வறட்டுத்தனமாக வாதிட்டு வருகிறார்கள்.

## மாவோயிஸ்ட் இயக்கம்: ஏறுமுகத்திலா, இறங்கு முகத்திலா?

“**வடதெலுங்கானா** இன்று கொரில்லா மண்டலத்தின் உயர்ந்த கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது; தென் தெலுங்கானா, கிழக்கு மண்டலம் (ஆந்திரா, ஒரிசாவின் பகுதிகள்) இராயல சீமா தெற்கு கடற்கரை மண்டலம் (ஆந்திரா) ஆகியன கொரில்லா மண்டலத் தயாரிப்புக் கட்டத்தில் உள்ளன.“ (ஆதாரம்: போராளி, ஜனவரிஏப்ரல் 2000, பக்.21) என்று 2000வது ஆண்டில் எழுதினார். இப்போது கூட “புதிய ஜனநாயகம்“ ஏட்டிற்கு எதிராக வெளியிடப்பட்ட பிரசுரங்களில் ஆந்திராவில் மாவோயிஸ்டுகளின் மக்கள் யுத்தம் தொடர்ந்து சாதனைகள் புரிந்து வருவதாகவும், லட்சக்கணக்கான மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் பீற்றிக் கொள்கிறார்கள்.

ஆனால், அங்குள்ள உண்மை நிலைமையோ வேறானதென்று கட்சி ஆவணங்களில் பின்வருமாறு இரகசியமாக எழுதி வைத்துக் கொண்டுள்ளார்கள்.

“வடதெலுங்கானாவில் இன்று இயக்கம் தீவிரமான சிக்கல்களை எதிர்கொண்டு பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலை திடீரெனத் தோன்றியதல்ல. 1996யில் மூன்றாவது சுற்று பன்முகத் தாக்குதல் தொடங்கியதிலிருந்து ஆரம்பமானது. அடக்குமுறை வடிவத்தைப் புரிந்துக் கொள்வதும் அதற்கேற்ற குறிப்பான செயலுத்திகளை சரியான தருணத்தில் கடைபிடிப்பதிலும் இருந்த தவறுகள் மற்றும் நம்மிடமுள்ள தவறான போக்குகளின் செல்வாக்கினாலும் தீவிரமான இழப்புகளை சந்திக்க நேரிட்டது. நாம் ஏற்கெனவே விவரித்தபடி மூலஉத்தி ரீதியிலான பகுதிகளான வடதெலுங்கானாவின் வனப்பகுதியில் கொரில்லா தளம் அமைப்பதை நோக்கி கொரில்லா யுத்தம் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதே பேராயத்தின் முடிவாக இருந்தது. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கான புறச்சூழல், எதிரியின் பன்முகத்தாக்குதல், மக்கள் போராட்டங்களின் தாழ்வுநிலை, எதிரி மேற்கொண்ட சீர்திருத்தங்களின் தாக்கம் போன்றவை மற்றும் அகநிலைச் சக்திகளின் வளர்ச்சி போதுமானதாக இல்லாததால் நாம் அந்த இலக்குகளை எட்டவில்லை. இதில் புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்வதிலுள்ள அகநிலைவாதமும், பருண்மையான செயலுத்திகள் வகுத்து இயக்கத்தை முன்கொண்டு செல்வதிலும் உள்ள குறைபாடுகளே முதன்மையானது. எதிரியின் அடக்குமுறை புதிய, உயர்ந்த

மட்டத்தில் நடப்பதையும், அவன் கையாளும் புதிய வடிவங்களை புரிந்துக் கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. அரசுப் படைகளின் புதிய வடிவிலான அடக்குமுறை மட்டுமின்றி, அதற்கு துணையாக ஆயுதந்தரித்த குண்டர்படை என அழைக்கப்படும் பச்சைப் புலிகள், நல்லமல்லா கோப்ராஸ் போன்ற ஆயுதபாணியான குண்டர் படைகளின் அடக்குமுறையும் நடத்தப்பட்டது. அதுமட்டுமின்றி, உளவாளிகளின் ஊடுருவல், கருங்காலிகளின் வலைப்பின்னல் போன்றவைகளாலும் இயக்கம் பெரும் இழப்புக்குள்ளானது. நமது தோழர்கள் கூறுவதைப் போல ‘‘இந்தியாவின் பொதுதன்மையான வழக்கு தொடுத்து நீதிமன்றங்களின் மூலம் முரண்பாட்டை தீர்த்துக் கொள்வது‘ என்பதில்லாமல் புரட்சிகர இயக்கத்தை நீர்த்துப் போக செய்வதே அடக்குமுறையின் நோக்கமாக உள்ளது.‘‘

‘‘நமது கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், கொரில்லா வீரர்கள், ம.தி. அமைப்பின் தலைவர்கள், செயல்வீரர்கள் ஆகியோர் கைது செய்யப்படுவது மிக அரிதே. மாறாக, அனைவரும் குரூரமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். இது ஏதோ ‘‘மிகவும் பின்தங்கிய பீகார் ஜார்கண்டு மாநிலத்தில் நடைபெறவில்லை. ஐ.கூ. யுகத்தில் ராக்கெட் வேகத்தில் போய் கொண்டிருக்கும் ‘‘வளர்ச்சியடைந்த‘ ஆந்திர மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றது. இது அங்கு மட்டுமின்றி புரட்சிகர இயக்கம் வளர்ச்சி வெறும் அனைத்துப் பகுதிகளுக்கும் இதே ‘‘ஆந்திர மாதிரியை‘ நடைமுறைப்படுத்த மைய அரசு தீர்மானித்துள்ளது. இந்த சிக்கல்களை பருண்மையாக எதிர்கொள்வதில் தவறு இழைத்ததினால் இன்று ஆந்திராவின் இயக்கம் மிகத் தீவிரமான இழப்புகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. மற்ற இடங்களிலும் புரட்சிகர இயக்கம் இந்த, இத்தகைய சிக்கல்களை பருண்மையாக தீர்க்கவில்லையென்றால் அங்கும் இயக்கம் முன்னேற்றம் அடைவதில் சிக்கல்கள் உண்டாகும்.‘‘ ங்ஆதாரம்: ‘‘வலது சந்தர்ப்பவாதக் கருத்துக்களை முறியடிப்போம்! நீண்டகால மக்கள் யுத்தப் பாதையை உயர்த்திப் பிடிப்போம்!‘‘ பக் 4647, இ.க.க. (மாவோயிஸ்ட்), தமிழ்நாடு மாநிலக் குழு வெளியீடு. தேதி குறிப்பிடவில்லை. அனேகமாக 2007ஆம் ஆண்டு மத்தியில் வெளியிடப்பட்டது.)

2000ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ம.யு. குழுவாக இருந்தபோது ‘‘போராளி‘‘ பத்திரிக்கையில் அவர்கள் குறிப்பிட்டதன்படி வட தெலுங்கானா கொரில்லா மண்டலத்தின் உயர்ந்த கட்டத்தை நோக்கியும், பிற பகுதிகள் ஏறத்தாழ ஆந்திரா முழுமையும் கொரில்லா மண்டலத் தயாரிப்பிலும் இருந்தன என்றனர்.

இப்படி அவர்கள் இங்கே புளுகிக் கொண்டிருந்தபோதே, ஆந்திராவில் உண்மையில் அவர்களின் இயக்கம் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருந்தது. அதுவும் இந்தப் பின்னடைவு 1996 முதற்கொண்டு நீடித்திருக்கிறது. இந்த உண்மையை 2001ஆம் ஆண்டு அக்கட்சி நடத்திய 9வது பேராயத்தின் அரசியல் அமைப்பு மீளாய்வு அறிக்கையின் அடிப்படையில் இப்போது தமிழ்நாடு மாநிலக் குழுவே தொகுத்திருக்கிறது.

2001ஆம் ஆண்டு மக்கள் யுத்தக் கட்சியின் 9வது பேராயத்திற்குப் பிறகாவது மேற்கண்ட பின்னடைவுகளைச் சரிசெய்து கொண்டு ஆந்திர இயக்கம் முன்னேறியதாக அவர்களின் உட்கட்சி ஆவணங்களோ, அதிகாரபூர்வ அறிக்கைகளோ எதுவுமே கூறவில்லை. இந்தப் பின்னணியில்தான் ஆந்திர அரசுடன் போர்நிறுத்தம், பேச்சு வார்த்தை, பிறகு அவற்றின் முறிவு ஆகியனவெல்லாம் நடந்தன. ஆந்திராவில் நீடித்துவந்த இழப்புகள், பின்னடைவுகள் தேக்கம் காரணமாகவும், அணிகள் மற்றும் மக்கள் நிர்பந்தம் காரணமாகவும்தான் போர் நிறுத்தம், பேச்சு வார்த்தைக்கு மக்கள் யுத்தக் கட்சி போனது என்ற உண்மையை புதிய ஜனநாயகம் அமைப்பு சொன்னபோது அவர்கள் ஆத்திரத்துடன் அதன்மீது பாய்ந்தனர். ஆந்திராவில் இயக்கம் முன்னேறி வருவதாக வெளி உலகுக்குக் காட்டிக் கொள்ளும் வகையில் "கொரில்லாக் குழுக்களின்" ஆயுதந்தாங்கிய தாக்குதல்களை ஆங்காங்கே அவ்வப்பொழுது நடத்தினர்.

மக்கள் யுத்தக் கட்சியும் மாவோயிஸ்ட் மையமும் இணைந்த பிறகு 2007ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடந்த மாவோயிஸ்ட் கட்சியின் இணைப்புப் பேராயத்தில் ஆழமான அரசியல் அமைப்பு மீளாய்வு நடத்தப்படவில்லை என்றாலும் மேற்கண்ட பின்னடைவைப் பேராயம் உறுதி செய்தது. "எதிரியின் இந்த அழித்தொழிப்பு யுத்தத்தை எதிர்கொண்டு, பேராய / மாநாட்டு அறைகூவல்களை நிறைவேற்ற, ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட தோழர்கள் தங்கள் இன்னுயிரை விலையாகத் தந்து, இன்னும் ஏராளமானோர் சித்திரவதைகளையும் அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். புரட்சிகர இயக்கம் இக்கொடுமைகளையெல்லாம் மீறி முன்னேறி வருகிறது." (ஆதாரம்: "கட்சிக் கலைப்புவாதத்தை முறியடிப்போம்!" 29.9.07 தேதியிட்ட இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழுவின் உட்கட்சி ஆவணம். )

புரட்சிகர இயக்கம் முன்னேறி வருவதாகக் கூறினாலும் 2007 பேராயத்துக்குப் பிறகு "ஏறக்குறைய எட்டு மாதங்களில் 200 பேரை இயக்கம்

இழந்திருப்பதோடு'' மேலும் பலரது கைதுகளாலும் துரோகங்களாலும் பிளவுகளாலும் இயக்கம் பின்னடைவுக்குள்ளானது என்பதுதான் உண்மை. இதை அவர்களது உட்கட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன.

இ.க.க.(மாவோயிஸ்ட்)இன் இன்றைய நிலை மற்றும் நெருக்கடிகள் குறித்து, அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ``கர்நாடகா மாவோயிஸ்ட் சுதந்திர மையம்'' பின்வருமாறு கூறுகிறது.

``இ.க.க.(மாவோயிஸ்ட்) ஒரு பெரிய புரட்சிச் சக்தியாக வளர்ந்திருப்பினும், அதே அளவு அது பாரிய சித்தாந்த மற்றும் நடைமுறை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அது ஆயுதப் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும் பகுதிகளிலேயே கூட சரியான மக்கள் திரள் பாதை அடிப்படையில் நான்கு நட்பு வர்க்கங்களின் கூட்டணியை கட்டுவதற்கு பலமான அடித்தளத்தை நிறுவுவதிலும், மக்கள் யுத்தத்தை முன்னெடுப்பதிலும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. ஏறக்குறைய 40 ஆண்டுகால போராட்டத்திற்கு பிறகும்கூட அதன் ஆயுதப் போராட்டம் ஆந்திரா, ஒரிசா, சட்டிஸ்கார், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களின் மிகவும் பின்தங்கிய மலைப்பிரதேசங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. பஞ்சாப், அரியானா, மகாராட்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா மற்றும் பிற மாநிலங்களில் கடந்த 2025 ஆண்டுகளாக வேலை நடந்து வருகிறது; இங்கெல்லாம் ஆயுதப் போராட்டங்களைத் தொடங்க பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இருந்தபோதும் எங்கேயும் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு மேலே முன்னெடுத்துச் செல்வது சாத்தியமற்றதாகவே இருக்கிறது.

198090களில் இந்தியப் புரட்சியாளர்களின் உத்வேக மையமாக விளங்கிய வடதெலுங்கானா ஆயுதப் போராட்டம் இன்று ஒரு பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. ஆந்திராவின் நல்லமலா மற்றும் பிற பகுதிகளில் கூட இயக்கம் இறங்குமுகமாகவுள்ளது. நகர்ப்புற மக்களை, குறிப்பாக, தொழிலாளர்கள், மாணவர்கள்இளைஞர்களை கணிசமான அளவு கூட கட்சியின் தலைமையில் அமைப்பாக்குவதில் நாடெங்கும் பின் தங்கிவிட்டது. ஏகாதிபத்தியம் அல்லது தரகு முதலாளித்துவம் அல்லது அரசு அல்லது வகுப்புவாதம் அல்லது புரட்சிகர இயக்கத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஒடுக்குமுறைக்கு எதிராக நாடு தழுவிய சக்தி வாய்ந்த மக்கள் இயக்கத்தை கட்டியமைப்பதில் தோல்வியுற்று விட்டது. இதன் விளைவாக, இராணுவ ரீதியிலான சக்தியாக கணிசமான அளவு வளர்ந்து விட்டபோதும்

நாட்டின் விவகாரங்களில் ஒரு குறிப்பிடத் தகுந்த பாத்திரமாற்றும் ஒரு அரசியல் சக்தியாகத் தோற்றமெடுக்க முடியவில்லை.‘‘

ஆனால், ஆந்திராவில் அவர்களது இயக்கம் இலட்சக்கணக்கான மக்கள் ஆதரவைப் பெற்று, தொடர்ந்து முன்னேறி வருவதாக இங்கே பிரசுரம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே தமிழகத்தில் நம் கண் முன்னே உள்ள நிலைமைகளைக் கூட இப்படித்தான் அவர்கள் மூடி மறைத்துச் சவடால் அடித்து வருகிறார்கள்; அதற்கும் அவர்களது உட்கட்சி ஆவணங்கள் ஆதாரங்களாக உள்ளன.

## தர்மபுரி அனுபவம் என்ன? மீளாய்வு எங்கே?

‘‘1990க்குப் பிறகு எதிரியின் அடக்குமுறைக்கு எதிராக, புதிய செயலுத்தியாக இரகசிய மக்கள் திரள் அமைப்புகள், இரகசிய செயல்பாடுகள் மற்றும் சுய பாதுகாப்புக்காக ஆயுதமேந்திய குழுக்களுடன் இயக்கம் வளர்ச்சியடைந்து வந்தது.‘‘ ‘‘1996 அக்டோபர் பிளீனத் தீர்மானத்தின்படி மக்கள் திரள் அமைப்புக் கிளைகளின் எண்ணிக்கையைப் பெருக்கி,

1999 மே தர்மபுரி வட்டாரக் கட்சிப் பிளீனத்தில் கணக்கிட்டபடி உழவர் அமைப்பு, பெண்கள் அமைப்பு, இளைஞர் அமைப்பு, மாணவர் அமைப்பு, பாலர் சங்கம் ஆகிய அனைத்து அமைப்புகளும் சேர்ந்து 100 கிளைகள் கட்டப்பட்டிருந்தன.‘‘ ‘‘மிகக் குறுகிய காலத்தில் சுமார் 100 கிளைகள் கட்டப்பட்டன என்ற உண்மைதான் போலீசை அதிர்ச்சியடைய வைத்தன. அதைவிட மக்கள் கட்சித் தோழர்களுக்கு ஆதரவாக போராடுகிறார்கள் என்பது போலீசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.‘‘ (2000ஆம் ஆண்டு ஜனபிப், போராளி, பக்: 1, 21, மற்றும் 32-33)

‘‘ ஒரு பக்கம் அரசின் அடக்குமுறையை சந்தித்துக் கொண்டே மறுபக்கம் மக்களின் போராட்டங்களும் ஆதரவும் பெருகி வருகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கு தருமபுரியில் புரட்சிகர மக்கள் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு அதாவது தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தை உருவாக்குவதற்கான தொடக்கத்தைக் கொண்டுள்ளது. எதிரியும் தனது நடவடிக்கையின் மூலம்

நமக்கு இதை உணர்த்தியுள்ளான். எனவே, தமிழகத்தில் புரட்சிகர மக்கள் இயக்கம் எத்தகைய அடக்குமுறையிலும் சரி, அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என்பது உறுதியாகி விட்டது.'' (மேற்படி போராளி, பக். 38)

இவ்வாறு 2000ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மக்கள் யுத்தக் குழுவினர் எழுதினர். இப்போது கூட புதிய ஜனநாயகத்துக்கு எதிரான வெளியீடுகளில், ``தர்மபுரி வடாற்காடு பகுதிகளில் நக்சல்பாரிகளுக்கு இருக்கும் செல்வாக்கு நாடறிந்த ஒன்று. எதிரிகளுக்குக் கூட இதை மறுக்கத் துணிவு கிடையாது.'' ``இன்று தர்மபுரியே அறிவிக்கப்படாத கலவரப் பகுதியாகக் கருதப்பட்டு கிராமம் கிராமமாக மக்கள் வேட்டையாடப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர். அப்புபாலன் சிலை திறப்பு விழாவின்போது கூட 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டு அதை ஒரு புரட்சித் திருவிழாவாக நடத்தியது தர்மரி மக்களிடையே நக்சல்பாரிகளுக்கு இருந்த செல்வாக்கிற்கான சாட்சியமாகும். '' (பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி, பக்.14)

இவ்வாறான மதிப்பீடும், எதிர்பார்ப்பும் பற்றி ``யதார்த்த நிலைமையை மிகை மதிப்பீடு செய்வதும், அமைப்பு, இயக்க வளர்ச்சியை ஊதிப் பெருக்கி உரிமை பாராட்டுவதும் ம.யு. குழுவினருக்கு வாடிக்கைதான் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன தேவை!'' (குறுக்கு வழி தேடி.... குழுசாகச வழிபாடு!' பு.ஜ. வெளியீடு, பக். 1718) என்று அப்போதே எழுதினோம்.

இப்படி எழுதியதற்காக பு.ஜ. மீது பாய்ந்து குதறியது ம.யு. குழு; இப்போதும் தர்மபுரியை மக்கள் செல்வாக்குப் பெருகியுள்ள பகுதியாக மதிப்பிடும் மாவோயிஸ்ட் கட்சி ``ஆயுதப் போராட்ட அரசியலும் நடைமுறையும்'' என்ற போராளி வெளியீட்டில் பின்வருமாறு எழுதியுள்ளது. ``1993க்குப் பிறகு புரட்சிகர மக்கள்திரள் அமைப்புகளின் செயல்பாடுகள் அறிவிக்கப்படாமலே தடை செய்யப்பட்டன. சட்டபூர்வ செயல்பாடுகளையே அனுமதிக்காத எதிரியின் இத்தகைய கொடூரமான அடக்குமுறைகளுக்குப் பின்னர், 1996-97 முதல் ஆயுதக் குழுக்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வந்தன. 2002 நவம்பரில் ஊத்தங்கரை சம்பவத்திற்குப் பின்னர் கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினால், தர்மபுரியில் இயக்க வேலைகள் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. மீண்டும் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டு மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மூல உத்தி ரீதியான பகுதியில் இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் இச்சம்பவம்

(பெரிய குளம் முருகமலைச் சம்பவம்) நடந்துள்ளது.'' (போராளி வெளியீடு, பக். 22).

மாவோயிஸ்ட் கட்சியினரே கொடுத்துள்ள இந்த விவரப்படி தர்மபுரியில் (1996–97இல்) ஆயுதக் குழுக்கள் நிறுவப்பட்ட ஏழாண்டுகளுக்குப் பிறகு ஷ அதாவது 2003 ஊத்தங்கரை சம்பவத்திற்குப் பின்னர், கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினால் இயக்க வேலைகள் தொடர முடியாத நிலை ஏற்பட்டது என்று ஒப்புக் கொண்டுள்ளார்கள். இப்போதும் இதுதான் நிலைமை.

☆ ``1996க்குப் பிறகு எதிரியின் அடக்குமுறைக்கு எதிராக புதிய செயலுத்தியாக இரகசிய மக்கள் திரள் அமைப்புகள், இரகசிய செயல்பாடுகள் மற்றும் சுய பாதுகாப்புக்காக ஆயுதமேந்திய குழுக்களுடன் இயக்கம் வளர்ச்சியடைந்து வந்தது.''

☆ மிகக் குறுகிய காலத்தில் போலீசே அதிர்ச்சியடையுமாறு சுமார் 100 கிளைகள் கட்டப்பட்டன. அதைவிட மக்கள், கட்சித் தோழர்களுக்கு ஆதரவாக போராடுகிறார்கள் என்பது போலீசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

☆ இந்த நிகழ்ச்சிப் போக்கு தருமபுரியில் புரட்சிகர மக்கள் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு, அதாவது தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தை உருவாக்குவதற்கான தொடக்கத்தைக் கொண்டிருந்தது. எத்தகைய அடக்குமுறையிலும் சரி, அது அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என்பது உறுதியாகி விட்டது என்று நம்பினார்கள்.

இப்படியெல்லாம் தருமபுரியில் தங்களுக்கு இருந்ததாகக் கூறிய அமைப்பு பலம், மக்கள் செல்வாக்கு இப்பொழுது என்ன ஆனது? பு.ஜ. அமைப்பினர்தான் முற்றிலும் வெளிப்படையான சட்டபூர்வ அமைப்பும் நடைமுறையும் கொண்டுள்ளார்கள்; ஒரு அடக்குமுறை வந்தாலும் தாங்க மாட்டார்கள்; தங்கள் தான் தலைமறைவு இயக்கத்தைக் கட்டியிருக்கிறோம். தாங்கள்தான் ஆயுதப் போராட்டத்தை தொடங்குவதற்குச் சரியான செயலுத்தியைக் கொண்டுள்ளோம் என்று பீற்றிக் கொள்கிறார்கள். 1996இல் இருந்து வகுத்துச் செயல்படுத்தியதாகக் கூறும் அப்படிப்பட்ட புதிய செயலுத்தியைக் கடந்த 10 ஆண்டுகளாக அமல்படுத்திய அனுபவம் என்ன? அரசியல் அமைப்பு மீளாய்வு எங்கே? இன்று தர்மபுரியில் உள்ள நிலைமைதான் என்ன?

இவற்றையெல்லாம் மக்களுக்கும் அணிகளுக்கும் நேர்மையாகவும்

பொறுப்பாகவும் முன்வைப்பதற்குப் பதில், "2002 நவம்பரில் ஊத்தங்கரை சம்பவத்திற்குப் பின்னர் கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினால், தருமபுரியில் இயக்க வேலைகள் தொடர முடியாத நிலை ஏற்பட்டது" என்று கொஞ்சமும் பொறுப்பும் நேர்மையும் இல்லாமல் இடத்தை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

## கர்நாடகா அனுபவமும் இதுதான்!

**தமிழ்நாட்டில்** எவ்வாறு மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்ட முன்னெடுப்புகள் திரும்பத் திரும்பக் கருச்சிதைவடைகின்றனவோ, அதுதான் கர்நாடகாவிலும் நிகழ்ந்துள்ளது. அங்கு இ.க.க.(மாவோயிஸ்ட்)இலிருந்து வெளியேறி தனி அமைப்பை நிறுவிக் கொண்டுள்ள தோழர்கள் அந்த அனுபவத்தைப் பின்வருமாறு தொகுத்துள்ளனர்.

"1987 முதல் 15 ஆண்டுகளாக கர்நாடகாவின் மிகவும் பின்தங்கிய பிதார் மற்றும் ரெய்ச்சூர் ஆகிய சமவெளி மாவட்டங்களில் ஆயுதந்தாங்கிய விவசாயிகளின் இயக்கத்தைக் கட்டியமைக்கும் வேலைகளில் கட்சி ஈடுபட்டது. குறிப்பிடத்தக்க முன்னேற்றமில்லாத காரணத்தால் பிதார் மாவட்ட வேலை 1995இல் கைவிடப்பட்டது. ஆனால், ரெய்ச்சூரின் கிராமப்புறத்தில் வேலைகள் தொடர்ந்தன. அங்கு உத்வேக மூட்டக்கூடிய பல போராட்டங்கள் தொடங்கப்பட்ட போதும், இறுதியில் எதிரியின் அடக்குமுறைகளை எதிர்கொண்டபோது இயக்கம் முன்னேற முடியவில்லை. பல தோழர்கள் மற்றும் மக்கள் தியாகங்களுக்குப் பிறகு இயக்கம் நெருக்கடிக்குள்ளானது.

"கிராமப்புற வேலை பாதகமான நிலைமைகளை சந்தித்ததாலும், மூலவுத்தி ரீதியில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஆயுதப்போராட்டத்தைக் கட்டியமைக்க வேண்டியதன் அவசியம் காரணமாகவும் ஐதராபாத்கர்நாடகா எல்லையிலிருந்து கிராமப்புற வேலைகளை மலநாடு பகுதிக்கு மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ரெய்ச்சூர் பிதார் கிராமப்புற வேலையின் தோல்விக்கான காரணங்களை மீளாய்வு செய்வதிலும், மலநாடு பகுதியில் ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கான செயலுத்தியை வகுப்பதிலும் மாநிலக் கட்சிக்குள் பாரிய கருத்து வேறுபாடுகள் எழுந்தன.

"மலநாடு பகுதியில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கான அவசியத் தேவைகள் குறித்து இடதுசாரி வறட்டுத்தனமான புரிதலை இ.க.க.(மாவோயிஸ்ட்)இன் மையக் குழுப் பொறுப்பாளர்களும் கர்நாடகா மாநிலக் குழுத் தலைமையும் கொண்டிருந்தனர். அங்கு ஆயுதப் போராட்டத்தைத் துவங்குவதற்கும் தயாரிப்புகளை முடிப்பதற்கும் ஒரு 18 மாதத் திட்டத்தைத் தயாரித்தார்கள். பிறகு அதை 12 மாதத் திட்டமாக மாற்றி, "கடந்தகால மீளாய்வை முடிப்பது, சமூக மற்றும் புவியியல் ஆய்வை நடத்துவது, குறைந்தது 125 கிராமங்களில் மக்கள் திரள் அமைப்புகளைக் கட்டுவது, குறைந்தது 50 முழுநேரப் புரட்சியாளர்களை சேர்ப்பது என்று முடிவு செய்தது. "பரபரப்பான செய்கைகள்' மூலம் போரைத் தொடங்கி, மக்கள் யுத்தத்தை வளர்த்தெடுத்து, புதிய கொரில்லா மண்டலங்களைக் கட்டியமைப்பதை நோக்கி நாம் முன்னேற வேண்டும் என்று தலைமையின் திட்டம் சொன்னது.

"மலநாடு பகுதி ஒப்பீடு ரீதியில் வளர்ச்சியடைந்ததும், எதிரிகள் பலம் வாய்ந்தவர்களாகவும் இருப்பதாலும், வரம்புக்குட்பட்ட அடித்தளம் மற்றும் அளவிலும் தரத்திலும் பலவீனமானதாகக் கட்சி இருப்பதாலும் மக்களைத் திரட்டுவதிலும் கட்சியைக் கட்டுவதிலும் அவசரத்தனம் காட்டக்கூடாது; தலைமையின் திட்டம் நடைமுறை சாத்தியமற்றதாக இருக்கிறது என்று கர்நாடக மாநிலக் குழு சிறுபான்மை வாதிட்டது; மையக்குழுப் பொறுப்பாளர்களே தலைமையின் திட்டத்தை ஆதரித்ததால் தானும் ஏற்றது. ஆனால் பரபரப்பான செயல்களில் ஈடுபடுவதை கட்சிக்குள் பலரும் எதிர்த்ததையடுத்து, அதை விலக்கிக் கொண்டு, 12 மாதங்களில் ஆயுதக் குழுக்களைக் கட்டி ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

"2002 மேயில் தேசிய பூங்கா திட்டத்துக்கு எதிரான போராட்டம் உச்ச கட்டத்தை எட்டியது. ஆங்காங்கு பல மக்கள் திரள் போராட்டங்கள் வெடித்தன. ஆனால், 2002 டிசம்பர் வெடிவிபத்து நிகழ்வு, தேசிய பூங்கா பகுதியில் ஆயுதக் குழு நடமாட்டத்தை முதன்முறையாக அம்பலப்படுத்தி விட்டது. எதிரி அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆயுதக்குழுவுக்கு எதிராக பொய் பிரச்சாரத்தையும் தேடுதல் வேட்டையையும் தொடங்கி விட்டான். அதன்பிறகு, மக்கள் திரளை அமைப்பாக்குவதாலோ, கட்சியைக் கட்டுவதாலோ, ஆயுதக் குழுக்களைக் கட்டுவதாலோ முன்னேற்றம் காண முடியவில்லை. எதிரிகளுக்கு

எதிராகக் குறிப்பிடத்தக்க போராட்டங்கள் எதிலும் மக்களை ஈடுபடுத்த முடியவில்லை.

"இந்த நிகழ்ச்சிப் போக்கில் நமது தோழர்களில் ஆறு பேர் எதிரியின் ஒடுக்குமுறையில் தியாகிகளானார்கள். மனரீதியில் தயாரில்லாததாலும் நோய்வாய்ப்பட்டதாலும் பல தோழர்கள் சொந்த வாழ்க்கைக்குத் திரும்பினார்கள். ஒருபுறம் ஆள்சேர்ப்பதும் குறைந்தது; நகர்ப்புற இயக்கமும் தேக்கநிலையை அடைந்ததால் அங்கிருந்து தோழர்களை அனுப்ப முடியாமற் போனது. இவ்வாறு இழப்புகளை ஈடுகட்டும் வகையில் ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க முடியாமற் போனது.

""நம்முடையதைப் போன்ற நாடுகளில் தொடக்கத்திலிருந்தே ஆயுதப் போராட்ட வடிவம் முதன்மையானதாக இருக்கிறது' என்பதை எந்திரப்பூர்வமாகவும், வறட்டுத்தனமாகவும் தலைமை வலியுறுத்துகிறது. ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதில் அவசியமான தயாரிப்புகள் செய்யாமல், அவசரத்தனம் காட்டுகிறது. ஆயுதப் போராட்டம் தொடங்குவதை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதுகிறது. தளப் பிரதேசத்தை நிறுவுவதற்கு தேசியசர்வதேசிய நிலைமைகள் சாதகமாக இருக்க வேண்டும் என்று கூறுவதை "கட்டக் கோட்பாடு' என்றும் வலது சந்தர்ப்பவாதம் என்றும் முத்திரைக் குத்தி ஒதுக்குகிறது.''

ஷ இவ்வாறு தமது நடைமுறையையும் இ.க.க.(மாவோயிஸ்ட்) கட்சித் தலைமையுடனான அரசியல் சித்தாந்த போராட்ட அனுபவத்தையும் கர்நாடகா தோழர்கள் தொகுக்கிறார்கள்.

## ஒப்பாரி வைக்கமாட்டார்கள்! புரட்சி சவால் அடிப்பார்கள்!

"**வெளிப்படையான** செயல்பாடுகளை அனுமதிக்காமல் புரட்சிகர அமைப்பின் மீதும், மக்களின் மீதும் கொடூரமான அடக்குமுறையை அரசு கட்டவிழ்த்துவிடும்போது, இதனை இரகசியமாக செய்ய வேண்டியுள்ளது. அதற்கான செயலுத்திகளையும், வழிமுறைகளையும் கடைப்பிடித்து மக்களை

ஆயுதப் போராட்டத்திற்கு அணிதிரட்ட வேண்டியுள்ளது. இத்தகைய செயலுத்தியையும் தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களில் நடைமுறைப்படுத்திய சிறப்பான அனுபவம் மாவோயிஸ்ட் கட்சிக்கு இருக்கின்றது. சட்டவாத நடைமுறையைத்தவிர, அரசியல் பிரச்சாரத்தைத் தவிர வேறெதுவும் அறியாத, அனுபவமில்லாத மா.அ.க.வின் தலைமைக்கு இதையெல்லாம் புரிந்து கொள்வது அவர்களின் கற்பனைக்கும் எட்டாத விசயமாகும்.''

''புரட்சிகர மக்கள் திரள் அமைப்புகளும், கட்சியும் தடை செய்யப்பட்டு, வெளிப்படையாக செயல்பட முடியாத சூழலில் ஆயுதப் போராட்டத்திற்கு தேவையான மக்கள் அடித்தளம், மற்றும் இதர தயாரிப்புகள் இரகசியமாக செய்யப்பட வேண்டும். இது ஒரு கலைவிழாவிற்கோ அல்லது ஊர்வலத்திற்கோ அணிதிரளுவதைப் போல வெளிப்படையாக இருக்காது. இருக்கவும் கூடாது. புரட்சிகர அமைப்புகளில் செயல்படும் செயல் வீரர்களையும், ஆதரவு சக்திகளையும் அம்பலப்படுத்தும் வகையில் செயல்படுவது மிகவும் தவறானதாகும். இது நிராயுதபாணியாக இருக்கும் அணிகள் மற்றும் ஆதரவு சக்திகளை போலீஸ் அரக்கர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கும். மேலும், ஆயுதப் போராட்ட தயாரிப்பு பணிகளுக்கு தடைகளை ஏற்படுத்தும். இவ்வாறு உருவாக்கப்படும் மக்கள் அடித்தளம், ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவானதாக இருக்கும். அது ஆயுதந்தாங்கிய வர்க்கப் போராட்டத்ினூடே உணர்வுப்பூர்வமான செயல்பாடுகளின் மூலமாக மேன்மேலும் அதிகரிக்கும். மக்கள் அடித்தளம், ஆதரவு என்பது அருவமானது கிடையாது. அது வெறுமனே ஆர்ப்பாட்டங்களிலும், ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளும் ஆதரவல்ல. மாறாக, ஆயுதப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உணர்வுப்பூர்வமாக அளிக்கப்படும் பங்களிப்பாகும்.'' (ஆயுதப் போராட்ட அரசியலும் நடைமுறையும், பக். 33, 34)

சரி! புரட்சிகர அமைப்பின்மீதும், மக்களின் மீதும் கொடூரமான அடக்குமுறையை அரசு கட்டவிழ்த்து விடும்போது எத்தகைய செயலுத்தியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ''சட்டவாத நடைமுறையைத் தவிர, அரசியல் பிரச்சாரத்தைத் தவிர வேறெதுவும் அறியாத அனுபவமில்லாத, மா.அ.க.விற்கு இதையெல்லாம் புரிந்து கொள்வது கற்பனைக்கெட்டாத விசயமாக இருப்பதாக''வே இருக்கட்டும். இவ்வளவுதூரம் உபதேசிக்கும் மாவோயிஸ்ட் கட்சி, கொடூரமான அரசு அடக்குமுறை சூழலில் ஆயுதப் போராட்டத்திற்கு மக்களைத் திரட்டுவது, அணிகளை திரட்டி பயிற்றுவிப்பது போன்றவற்றில் மிகச் சரியான செயலுத்தியை தமிழகம் உட்பட பல்வேறு

மாநிலங்களில் நடைமுறைப்படுத்திய சிறப்பான அனுபவம் பெற்ற மாவோயிஸ்ட் கட்சி, 1996 முதல் ஆந்திராவில் சந்தித்து வரும் இழப்புகள், பின்னடைவுகளைச் சரிசெய்து முன்னேற்ற முடியாமல் இருப்பது ஏன்? 2002 நவம்பரில் ஊத்தங்கரை சம்பவத்திற்கு பின்னர் கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினால், தர்மபுரியில் இயக்க வேலைகள் தொடர முடியாத நிலை ஏற்பட்டது ஏன்? அதையும் சரிசெய்யமுடியாமல் இடத்தை மாற்றிக்கொண்டுபோவது ஏன்?

எதிரி இரண்டு கரங்களிலும் வாள்களை ஏந்தி, மக்கள் மீது யுத்தத்தை திணிக்கும்போது அவனுடைய வழியைப் பின்பற்றி நாமும் வாள்களை எடுக்க வேண்டும் என்ற மாவோவின் கூற்றை எடுத்துக் காட்டி "இத்தகைய புரட்சிகரப் பாதையில் முன்னேறும்போது சில நேரங்களில் பின்னடைவுகள், தியாகங்கள் தவிர்க்க முடியாதவை! புரட்சியாளர்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்; பாடங்களைப் பயின்று ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியாக மாற்றுவார்கள். இது புத்தகப் புழுக்களுக்குப் புரியாது!" (பெரியகுளத்தில் தெறித்த சிறு பொறி, பக். 15)

சரி! இவர்கள் ஒப்பாரி வைக்காத புரட்சியாளர்களாகவே இருக்கட்டும். 2002 நவம்பர் ஊத்தங்கரை சம்பவத்தால் ஏற்பட்ட "தவிர்க்க முடியாத(!)" பின்னடைவுகள் தியாகங்கள், இழப்புகளில் இருந்து இவர்கள் பாடங்கள் கற்றுக் கொண்டார்களா? அதை வெற்றியாக மாற்றினார்களா? அவர்கள் நமக்கு உபதேசிப்பதைப் போல பாடங்களைக் கற்றுக் கொண்டு, அந்தப் பின்னடைவை வெற்றியாக மாற்றாமல், கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினால் தருமபுரியில் இயக்க வேலைகள் தொடர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று முடிவு செய்து, வேறு இடத்துக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

உண்மையில் தருமபுரிஊத்தங்கரை பின்னடைவுகள் இழப்புகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாமல், புதிய பகுதியைத் தெரிவு செய்ததோடு, பழைய செயலுத்தி அடிப்படையிலேயே இயக்க வேலைகளையும் செயல்பாடுகளையும் தொடங்கினார்கள். அதனால்தான் மீண்டும் ஒரு ஊத்தங்கரையை பெரியகுளம் முருகமலையிலும் அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. இதிலிருந்தாவது அவர்கள் உபதேசித்தவாறு புரட்சியாளர்களுக்கேயுரிய முறையில் பாடங்களைக் கற்கிறார்களா?

"மீண்டும் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டு மேற்கு தொடர்ச்சிமலையில்

அமைந்துள்ள மூலஉத்தி ரீதியான பகுதியில் இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் இச்சம்பவம் (முருகமலை சம்பவம்) நடந்துள்ளது. மக்களை அணிதிரட்டி புரட்சிகர யுத்தத்தையும் மக்கள் படையையும் கட்டுவதை முதன்மையாகக் கொண்டுள்ள எந்தவொரு அமைப்பிற்கும், அவற்றை செய்வதற்கு சாதகமான நிலப்பரப்பும், ஆயுதங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. வெறும் வாய்ச் சொல்லாலும், புத்தகத்திலும் புரட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கும் ‘‘காற்றடைத்த பைகளுக்கு‘ அதன் முக்கியத்துவம் புரியாது. தேவையும் இராது.‘‘ (ஆயுதப் போராட்ட அரசியலும் நடைமுறையும், போராளி வெளியீடு, பக்.22)

முருகமலை சம்பவம் குறித்த ‘‘பு.ஜ.‘‘ கட்டுரைக்குப் பதிலுரையாக ‘‘பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி‘‘ என்ற வெளியீட்டை எழுதிய அறிவொளி உண்மையில் பெயருக்கு பொருத்தமாக சிந்திப்பவராக இருந்தால், ‘‘மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மூலஉத்தி ரீதியான பகுதியில் இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் இச்சம்பவம் நடந்துள்ளது‘‘ என்ற போராளி வெளியீட்டின் வாசகத்தைக் கவனிக்க வேண்டும்.

முருகமலை சம்பவம் நடக்கும்போது அந்தப் பகுதியில் இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயற்பாடுகள் தாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயற்பாடுகள் என்று மாவோயிஸ்ட்கள் குறிப்பிடுவது எந்த வேலைகளை? மக்களைத் திரட்டுவது, மக்கள் ஆதரவைப் பெறுவதா? ஆட்களையும் ஆயுதங்களையும் சேர்ப்பதும் ஆயுதப் பயிற்சி பெறுவதையுமா?

நிலப்பரப்பு மற்றும் ஆயுதங்களின் முக்கியத்துவத்தை தங்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும், புதிய ஜனநாயகம் அமைப்புக்கு அது புரியாது, அதன் தேவையும் இராது என்று சாடுவதன் மூலம் ஆட்களையும் ஆயுதங்களையும் சேர்ப்பதும், ஆயுதப் பயிற்சி எடுப்பதையும் தான் இயக்க வேலைகள் தொடங்குவதற்கான செயற்பாடுகள் என்று மாவோயிஸ்ட் போராளிகள் குறிப்பிடுகிறார்கள் என்பது தெளிவு. அதைத்தான் பெரியகுளம் முருகமலையில் அவர்கள் செய்தார்கள்.

அப்படி இல்லாவிட்டாலும், இயக்க வேலைகள் தொடங்குவதற்கான

செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்கிறபோது, பெரியகுளம் பகுதியில் அவர்கள் எப்படி ஏற்கெனவே மக்கள் ஆதரவைப் பெற்றிருக்க முடியும்? இதைத்தான் ''பெரியகுளம் பகுதியில் மாவோயிஸ்ட் அமைப்பிற்கு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான செல்வாக்கு ஏதும் இல்லை'' என்ற வகையில் புதிய ஜனநாயகம் விமர்சித்திருந்தது. இந்த விமர்சனத்தை மறுக்க முடியாத நிலையில் போராளி, இதுபற்றி நேரடியாக மறுப்பு எழுதுவதற்குப் பதில் மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கே ஆயுதப் போராட்ட அவசியத்தைப் பற்றி நீட்டி முழங்கியிருக்கிறது.

## உள்ளொன்றும் புறமொன்றும் பேசும் மாவோயிஸ்டுகளின் சாணக்கியத்தனம்

''**பெரியகுளத்தில்** தெறித்த சிறுபொறி'' பிரசுரத்தை எழுதியவர் அறிவொளி அல்லவா! தனது அறிவொளியைக் கொண்டு பெரிய குளத்தில் மாவோயிஸ்ட் அமைப்பு மக்கள் ஆதரவைப் பெற்றிருந்ததாக சாணக்கியத்தனமாக (சாணக்கியன் மண் பொம்மைகள் செய்து உயிர் கொடுத்த மாதிரி) மாவோயிஸ்ட் ஆதரவாளர்களைப் படைத்திருக்கிறார். அதனால்தான் நேரடியாக பதில் எழுதாது, மிகவும் தந்திரமாகப் பின்வருமாறு எழுதியிருக்கிறார். ''பெரியகுளம் பகுதியில் மாவோயிஸ்ட் அமைப்பிற்கு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான செல்வாக்கு ஏதும் இல்லையாம். அதற்காக அந்த வட்டாரத்தில் யாரும் கைது செய்யப்பட்டதாக செய்தியும் இல்லையாம். பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்து பரம இரகசியத்தை இவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! நான் மாவோயிஸ்ட் ஆதரவாளர்; என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள் என மார்பை காட்டிக் கொண்டு நிற்க மக்கள் என்ன மடையர்களா? இந்த எளிய உண்மைகூட இந்த ''மாமேதை'களுக்குத் தெரியவில்லை!'' (பெரிய குளத்தில் தெறித்த சிறுபொறி, பக்.14)

சொல்வதற்கு உண்மை இல்லாதபோது, என்னவெல்லாம் தகிடுதத்தங்கள் செய்து, நாகாசு வேலைகள் செய்து பொய்களை அலங்கரிக்க வேண்டும் என்பதை இந்த அறிவொளிகளிடமும் போராளிகளிடமும்தான் கற்றுக் கொள்ளவேண்டும். இதே தகிடுதத்த நாகாசு வேலை செய்து பெரியகுளத்தில் தமக்குள்ள மக்கள் ஆதரவு

பற்றி முறுக்கி முறுக்கிப் பின்வருமாறு மாவோயிஸ்ட் கட்சி, பெரியகுளம் முருகமலை மீளாய்வு ஒன்றைத் தயாரித்திருக்கிறது.

‘‘ஊத்தங்கரை சம்பவத்தைப் போலவே தற்போதும் பயிற்சி முகாம் நடத்தும் சமயத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதால், ஏன் மீண்டும் இத்தகைய தவறுகள் நிகழுகின்றன என்ற கேள்வி அனைவரின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. ‘‘ஒருவேளை மக்கள் அடித்தளம் நமக்கு பலவீனமாக இருப்பதால் இந்தச் சம்பவம் நடந்திருக்குமோ‘ என நினைப்பவர்களும் உண்டு. மக்கள் அடித்தளத்தைப் பற்றி நமக்கு இயங்கியல் ரீதியான கண்ணோட்டம் அவசியம். மக்கள் அடித்தளம் என்பது எப்போதும் ஒப்பீட்டு அளவிலானதாகும். ஒரு குறிப்பிட்ட சூழலின் தன்மைக்கேற்றவாறு இருக்கும். ஒரு கொடூரமான அடக்குமுறை நிலவும் போது நமக்கு இழப்புகள் தொடர்ச்சியாக ஏற்படும்போது மக்கள் அடித்தளம் பலவீனமாகவே இருக்கும் என்பதும் அதைப் போலவே புரட்சிகர இயக்கம் வெற்றிகள் ஈட்டி முன்னுக்குப் போகும் போது மக்கள் அடித்தளம் பலமடையும், விரிவடையும். ஒரு சட்டப்பூர்வமான வெளிப்படையான இயக்கம் நடைபெறும்போது இருக்கும் மக்கள் அடித்தளமும் ஒரு புரட்சிகர யுத்தம் நடத்தப்படும் போது இருக்கும் மக்கள் அடித்தளமும் ஒரே மாதிரியானவையல்ல...‘‘
‘‘அப்பகுதியில் அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காகவோ வெளிப்படையாகவோ அல்லது தலைமறைவாகவோ நமது கண்ணோட்டப் பகுதியில் மக்களை அணிதிரட்டி நாம் இன்னும் எந்தப் போராட்டத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ செய்யவில்லை. மாறாக, ரகசியமாக ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவாளர்களையும் இளைஞர்களையும், கட்சிக் கருக்குழுக்களையும் அணிதிரட்டி வருகிறோம்.‘‘

‘‘அப்படியானால் இவ்வளவு பலவீனமான மக்கள் அடித்தளத்தை வைத்துக் கொண்டு ஆயுதப் போராட்டம் துவங்குவதோ அல்லது பயிற்சி முகாம் நடத்துவதோ சரியானதா? என்ற கேள்வி எழலாம். நாம் ஏற்கெனவே நமது தவறுகளை பரிசீலித்தபடி மக்களடித்தளம் இல்லாது இருந்ததால் இந்த சம்பவம் ஏற்படவில்லை. மாறாக, நாம் கடைபிடிக்க வேண்டிய சில வழிமுறைகள் நமக்குத் தெரிந்த வழிமுறைகள் செய்யக்கூடிய வழிமுறைகள் கடைபிடிக்காததன் விளைவாகவே இச்சம்பவம் நடைபெற்றுள்ளதைக் காணலாம். நாம் செய்த தவறுகளுக்கு அரசியல் சித்தாந்தக் காரணங்கள் உள்ளன என்பது வேறு. மக்கள் அடித்தளம் இல்லாததால் ஏற்பட்டது என்பது வேறு என்பதை நாம் அறிய வேண்டும்.‘‘

பிரச்சினையின் அடிப்படைக் காரணமான மக்களடித்தளம் இல்லை என்பது காரணமில்லை, இதை ஏற்பாடு செய்த, இதற்கு பொறுப்பான தோழர்கள் ஒழுங்காக செய்யாததே காரணம் என்பதுதான் மாநிலக்குழுவின் மீளாய்வு முடிவு.

அரசியல் சித்தாந்த காரணங்கள் உள்ளன என்பதை ஒப்புக் கொண்டு விட்டு தன்னெழுச்சி, தாராளவாதம், சட்டவாதம் ஆகிய போக்குகள்தான் சிக்கலுக்கு காரணம் என்று சொல்லி, இதை நடைமுறைப்படுத்திய தோழர்களைக் குற்றவாளியாக்க முயற்சிக்கிறது.

மேலும், "தற்போது நமக்கு கிடைத்துள்ள தகவலின்படி நாம் நமக்குள்ள பலவீனமான மக்களடித்தளத்தை இன்னும் சரியாக பயன்படுத்தியிருப்போமானால் இச்சம்பவம் நடந்திருக்காது என்பதே எதார்த்தமாகும்" என்று அடுத்த வரிகளில் சொல்கிறது. அது என்ன தகவல் என்பதை மாநிலக்குழு சொல்லவில்லை. ங்ஆதாரம்: இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழு தயாரித்த பெரிய குளம் மீளாய்வு அறிக்கைசி.

இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழுவின் மீளாய்வு அறிக்கையின்படியே, ஆயுதப் போராட்டத்தை தொடங்கி, கொரில்லா மண்டலத்தையும் தளப் பிரதேசத்தையும் நிறுவுவதற்கான வாய்ப்புள்ளதாக மதிப்பீடு செய்து அவர்கள் தெரிவு செய்து இயக்க வேலைகளைத் தொடங்கிய பெரியகுளம்மேற்குத் தொடர்ச்சி மலைக் கண்ணோட்டப் பகுதியில் உண்மையில் அவர்களுக்கு மக்கள் அடித்தளம் கிடையாது. "அப்பகுதியில் அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காகவோ வெளிப்படையாகவோ அல்லது தலைமறைவாகவோ நமது கண்ணோட்டப் பகுதியில் மக்களை அணிதிரட்டி நாம் இன்னும் எந்தப் போராட்டத்தையோ அல்லது பிரச்சார இயக்கத்தையோ செய்யவில்லை" என்று அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

அந்தப் பகுதியில் மக்கள் அடித்தளம் இல்லாமலேயே ஆயுதங்களை சேர்ப்பதிலும், ஆயுதப் பயிற்சி எடுப்பதிலும் மாவோயிஸ்ட் கட்சியினர் ஈடுபட்டார்கள். இதுதான் அவர்களது செயலுத்தியுமாகும். மக்களை அணிதிரட்டுவதற்கு முன்பே அதற்கு முதற்படியாக செய்ய வேண்டியதே ஆயுதங்களைச் சேர்ப்பதும், ஆயுதக் குழுக்களைக் கட்டுவதும், அவற்றைப்

பயன்படுத்தி ஆயுதப் போராட்ட அரசியலைப் பிரச்சாரம் செய்யும்போதே ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதுதான் மாவோயிஸ்ட் கட்சியின் செயலுத்தி.

இவ்வாறு செய்வதைத்தான், ‘‘அந்தப் பகுதியில் மக்கள் அடித்தளம் இல்லாமலேயே ஆயுதங்களை சேர்ப்பதிலும், ஆயுதப் பயிற்சி எடுப்பதிலும் மாவோயிஸ்ட் கட்சியினர் ஈடுபட்டார்கள்‘‘ என்று பு.ஜ. விமர்சனம் செய்திருந்தது. அக்கட்சியின் மாநிலக் குழு மீளாய்வு செய்த அறிக்கையும் இதையே உறுதி செய்கின்றது.

புதிய ஜனநாயகம் ஏட்டின் விமர்சனங்கள் முற்றிலும் சரியானவையே என்பதை நிரூபிக்கும் ஆதாரங்களை இரகசிய அறிக்கையாக எழுதி வைத்துக் கொண்டிருக்கும் மாவோயிஸ்டு கட்சி, வெளியே சண்டப்பிரசண்டங்களும், சவடால் வாதங்களும், கோட்பாட்டு விளக்கங்களும் அளிக்கின்றது.

‘‘மாவோயிஸ்டுகளுக்கு அரசியல் கண்ணோட்டம் கிடையாது; சுத்த இராணுவக் களண்ணாட்டம் உள்ளது. இடது சாகசவாதிகள். அவர்களுடைய சுத்த இராணுவக் கண்ணோட்டம் காரணமாக மக்களின் அரசியல் முன்முயற்சி பற்றிக் கவலைப்படுவதில்லை. ‘‘தமது ஆயுத நடவடிக்கைகளுக்கு உதவுவது‘ என்று கோணத்தில் மட்டுமே மக்களின் ஆதரவு குறித்துக் கவலைப்படுகிறார்கள்‘‘ என்று பு.ஜ. கூறுவதாக மாவோயிஸ்டுகளாகவே தொகுத்துள்ள பு.ஜ. கருத்துக்களுக்கு அவர்கள் பின்வருமாறு கோட்பாட்டு விளக்கமளித்துள்ளனர்.

‘‘சுத்த இராணுவக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடுகளாக தோழர் மாவோ கீழ்க்கண்டவற்றைக் கூறியுள்ளார்.

**அ. இராணுவ விவகாரங்களையும் அரசியலையும் ஒன்றுக்கெதிராக மற்றொன்றை நிறுத்துவது; அரசியல் கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு வழிமுறைதான் இராணுவ விவகாரங்கள் என்பதை அங்கீகரிக்க மறுக்கின்றனர்; இராணுவ வேலைகள்தான் அரசியலுக்கு தலைமை அளிக்கின்றன.**

**ஆ. செம்படையின் கடமை வெறும் யுத்தம் புரிவது மட்டுமே எனக் கருதுவது;**

**இ. அமைப்பு ரீதியாக, அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இலாக்காக்கள் இராணுவ வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இலாக்காக்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என கருதுவது;**

**ஈ.அரசியல் பிரச்சாரம் செய்வதையும், மக்களை அமைப்பு ரீதியாக அணிதிரட்டுவதையும் கைவிடுவது;**

**உ. ஒரு போரில் வெற்றியடைந்தால் தற்பெருமை கொள்வதும் தோல்வியடைந்து விட்டால் சோர்வுக்கு உள்ளாவதும்;**

**ஊ. தமது படையினரைத் தவிர (நான்காவது வழி இராணுவம்) வேறொருவரும் புரட்சிகர சக்திகள் கிடையாது என்ற குறுகிய மனப்பான்மை கொள்வது; எ. உள்ளூர் மக்களை ஆயுதபாணியாக்க வேண்டும் என்ற முக்கியமான கடமையை உணராமலிருப்பது;**

**ஏ. அகநிலை, புறநிலைமைகளை கணக்கில் கொள்ளாமல் புரட்சிகர அவசரக் குடுக்கைத் தனத்திற்குள்ளாவது; மக்கள் மத்தியில் பணிபுரிவதற்கான சிரமங்களை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது; (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் படைப்புகள்)''** (போராளி மேற்கோள் காட்டியவாறு, பக்: 67)

இந்த மேற்கோளைத் தரும் மாவோயிஸ்டுகள் ''அவர்கள் (பு.ஜ.) வைத்துள்ள விமர்சனத்திற்கும் சுத்த இராணுவக் கண்ணோட்டத்திற்கும் எந்த அளவிற்கு பொருத்தம் உள்ளது என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும்'' என்றுகூறுகிறார்கள். நாமும் இதை ஏற்கிறோம். பெரிய குளம் தர்மபுரி அனுபவம் குறித்த மாவோயிஸ்டுகளின் அறிக்கை விவரங்களை முன் வைத்துள்ளோம். இனி அவர்களின் கண்ணோட்டம் சுத்த இராணுவ சாகசவாதமா இல்லையா என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

## குதர்க்கவாதமே கோட்பாடாக!

**மாவோயிஸ்ட்** கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் மீதும் அதன் மையத் தலைமை மீதும் புதிய ஜனநாயகம் அமைப்பு முன்வைக்கும் விமர்சனங்களைப்

புரிந்து கொண்டு பொறுப்பான பதில் கூறாமல், அவற்றைத் திரித்துக் கூறி தவறான வியாக்கியானம் செய்து அறிவொளியும் போராளியும் பல விதண்டாவாதங்கள் புரிகின்றனர்.

சான்றாக, பெரியகுளம் முருகமலை சம்பவத்தை ஒட்டி பு.ஜ. எழுதிய கட்டுரையின் தலைப்பு "நக்சல்பாரி "அபாயம்': அரசை அச்சுறுத்துவது ஆயுதமா, அரசியலா?'' என்று இருந்தது. அதை, "இவ்வாறு வினாவைத் தொடுத்து ஆயுதத்தையும் அரசியலையும் ஒன்றுக்கொன்று எதிரானதாக இயக்கவியல் பார்வையின்றி நிறுத்தியுள்ளனர்'' என்றும் "நக்சல்பாரியால் முன்வைக்கப்பட்ட ஆயுதப் போராட்டப் பாதையிலிருந்து விலகி, ஆயுதப் போராட்டப் பாதைக்கு எதிராக வெறும் அரசியல் அணிதிரட்டலை மட்டுமே முன்வைப்பது வடிகட்டிய வலது சந்தர்ப்பவாதமே ஆகும்'' (பெரியகுளத்தில்..., பக்.8) என்றும் மாவோயிஸ்டுகள் குதர்க்கமாக வியாக்கியானம் செய்துள்ளார்கள்.

இந்தக் குதர்க்கத்தையே கோட்பாடாக்கித் தருகிறது, போராளி வெளியீடு. "நக்சல்பாரி அபாயம் அரசை அச்சுறுத்துவது ஆயுதமா, அரசியலா' எனத் தலைப்பிட்டு இருப்பதே மிகவும் சதித்தனமானது. இது அரசியலுக்கும் ஆயுதத்திற்கும் இடையிலுள்ள உறவை, ஒன்றிற்கெதிராக மற்றொன்றை நிறுத்தும் இயந்திரகதியான அணுகுமுறை. இந்தியப் புரட்சியின் அரசியல் வழியே ஆயுதப் போராட்டத்தின் மூலம், புரட்சிகர யுத்தத்தின் மூலம், மக்களை அணிதிரட்டி அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதுதான். இதில் ஆயுதப் போராட்டம் இல்லாத அரசியல் என ஒன்றில்லை. மேலும், இந்தியப் புரட்சியின் முதன்மையான போராட்ட வடிவமே ஆயுதப் போராட்டம் தான். புரட்சிகர யுத்தம் தான். அப்படியிருக்கும்போது, ஒன்றுக்கெதிராக மற்றொன்றை நிறுத்துவது மோசடியாகும். (போராளி வெளியீடு, பக்.19)

இது வெறுமனே குதர்க்கமான, விதண்டாவாதம் மட்டுமல்ல. இதிலும் தமது இடது சந்தர்ப்பவாதக் கண்ணோட்டத்தைத்தான் மாவோயிஸ்டு கட்சியினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

"பெரிய குளத்தில் நடந்தது ஒரு மிகச் சிறிய நிகழ்வு'' என்றுகூறும் அறிவொளி, அதையொட்டி தமிழகத்திற்கே ஏதோ ஆபத்து ஏற்பட்டுவிட்டதைப் போன்று பீதியைக் கிளப்பி, தமிழகம் முழுவதும் ஓர் பாசிச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அதிரடிப்படை சிறப்பு முகாம்களை நிறுவி, குற்றாலம் முதல் தர்மபுரி வரை மலைகள் காடுகளில் எல்லாம் நக்சல் தேடுதல் வேட்டை

என்ற பெயரில் கிராமம் கிராமமாக, வீடுவீடாகச் சென்று மிரட்டி, மக்களை அச்சத்தில் உறைய வைக்கின்றனர், என்கிறார்.

"தமிழகத்தில் மாவோயிஸ்டுகள் பெரிய அளவில் வளர்ந்து விடவில்லை. எண்ணிக்கையில் சிலரே உள்ளனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் சுடுவதற்குப் பயன்படாத சாதாரண ஆயுதங்கள். இப்படியெல்லாம் மதிப்பீடு செய்யும் இந்தக் காவல் துறை ஏன் இப்படி மாவோயிஸ்டுகளால் மிகப்பெரிய ஆபத்து என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். தேடப்படும் நக்சலைட்டுகளின் தலைக்கு லட்சக்கணக்கில் விலை வைத்து சட்ட விரோதமாக அவர்களின் புகைப்படத்தை வெளியிட்டு மக்களுக்காகப் போராடும் அர்ப்பணிப்பு உணர்வுள்ள அத்தோழர்களைக் கொடிய குற்றவாளிகளைப் போல படம் போட்டுக் காட்டி அவர்களை கோர முகத்துடன் சித்தரிப்பது ஏன்? " (பெரிய குளத்தில்..., பக். 56)

பெரியகுளம்முருகமலை சம்பவத்தையொட்டி அரசும் போலீசும் செய்தி ஊடகங்களும் பீதியூட்டி ஊதிப் பெருக்கிச் செய்யும் இந்தப் பிரச்சாரங்களைப் பற்றி மாவோயிஸ்டுகள் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்குத்தான் "நக்சல்பாரி அபாயம்: அரசை அச்சுறுத்துவது ஆயுதமா, அரசியலா?" என்றவாறான கேள்வி எழுப்பி புதிய ஜனநாயகம் விளக்கமளித்திருந்தது.

புதிய ஜனநாயகம் அந்தக் கட்டுரையில் எங்கேயும் தனது அமைப்பைப் பற்றியோ, இதன் அரசியல்சித்தாந்த நிலைப்பாடுகள் பற்றியோ, இவற்றைப் பார்த்துத்தான் அரசு அச்சப்படுவதாகவோ குறிப்பிடவேயில்லை. இருந்தபோதும், "நக்சல்பாரி "அபாயம்': அரசை அச்சுறுத்துவது மாவோயிஸ்டு கட்சியினரின் ஆயுதமா, புதிய ஜனநாயகம் அமைப்பினரின் அரசியலா?" என்று பொருள்படும் வகையில் பு.ஜ. எழுதியிருப்பதாக அறிவொளிகளும் போராளிகளும் தாமே வியாக்கியானம் செய்து கொண்டுள்ளார்கள்; புதிய ஜனநாயகம் அமைப்பையோ, அரசியலையோ பார்த்து அரசு அச்சப்படவில்லை என்றும் தங்கள் "ஆயுதப் போரட்ட அரசியலும் நடைமுறையும் அச்சுறுத்துவது, அரசை மட்டுமல்ல, மா.அ.க.வையும்தான்..." என்றும் போராளி வெளியீடு போட்டிருக்கிறது.

பெரியகுளம்முருகமலை சம்பத்தையொட்டி பீதியூட்டி ஊதிப் பெருக்கிச் செய்யப்படும் பிரச்சாரத்தில் போலீசு, கருணாநிதி அரசு, ஆளும் வர்க்கங்கள், செய்தி ஊடகங்களின் நோக்கங்களையும் ஆளும் வர்க்கக் கட்சிகளின் அராஜக

வன்முறைகளையும் எடுத்துச் சொன்ன புதிய ஜனநாயகம், "மாறாக இந்த கொள்ளைக்கார அரசமைப்பைத் தூக்கியெறிவதற்காக ஆயுதம் ஏந்த வேண்டும்'' என்று கூறுவதனால்தான், ஜனநாயகத்தின் எல்லாத் தூண்களும் "தீவிரவாதிகள்' என்று முத்திரை குத்தி நக்சல்பாரிகள் மீது பாய்ந்து பிடுங்குகின்றன. குறிப்பாக, தனியார்மயதாராளமயக் கொள்கைகளை எதிர்த்துக் கிளர்ந்தெழும் உழைக்கும் மக்கள், நாளை கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் அணிதிரண்டு விடுவார்களோ என்ற அச்சம்தான் ஆளும் வர்க்கங்களை நடுங்கச் செய்கிறது. துப்பாக்கி காடு பயிற்சி என்பதல்ல எதிரிகளின் அச்சத்துக்குக் காரணம். மார்க்சியம் லெனினியம் மாசேதுங் சிந்தனை என்ற கம்யூனிசச் சித்தாந்தம்தான் அவர்களை அச்சுறுத்துகிறது. கம்யூனிசப் புரட்சியாளர்களின் உறுதியும் விடாப்பிடியான முயற்சியும் அவர்களுக்குப் பீதியூட்டுகிறது'' என்று எழுதியது. (பு.ஜ. ஆக. 2007, பக்.5)
இவ்வாறு "ஆயுதப் போராட்ட அரசியலையும்' நக்சல்பாரிகள் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் பற்றித்தான் புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது.

இதை மறுக்கும் மாவோயிஸ்டுகள், போலீசின் சட்டம் ஒழுங்கு முறைக்கு உட்பட்டு அரசியல் போராட்டம் நடத்தும், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நக்சல்பாரியையும் ஆயுதப் போராட்டத்தை ஜெபித்துக் கொண்டும் ஆனால் நடைமுறையில் அதற்காக ஒரு துரும்பைக் கூட அசைக்காததும், வெறும் பிரச்சாரத்தைத்தவிர வேறெதுவும் செய்யாததுமான புதிய ஜனநாயகம் அமைப்பைப் பார்த்து இந்திய அரசு அச்சப்படவில்லை; இந்திய அரசுக்கு அது மிகப்பெரிய அபாயம் என்று கூறவும் இல்லை, தடை செய்யவும் இல்லை, அதனை ஒழிக்கும் நோக்கத்துடன் மத்தியமாநில ஆயுதப் படைகளைக் களமிறக்கவுமில்லை என்கின்றனர்.

இதற்கு மாறாக, ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசியல் அதிகாரம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதை நாற்பதாண்டு காலமாக நடைமுறைப்படுத்திக் கொண்டு, மக்கள் விடுதலை கொரில்லா இராணுவத்தைக் கட்டியமைத்து, மத்தியமாநில ஆயுதப் படைகளுடன் கடுமையான யுத்தத்தை நடத்திக் கொண்டு, கொரில்லா மண்டலங்களை உருவாக்கி, தண்டகாரண்யாவில் மக்களின் அரசியல் அதிகார அலகுகளை நிறுவி, விடுதலைப் பிரதேசத்தை நோக்கி முன்னேறி வருவதுடன் இந்தியாவின் இதர பகுதிகளில் கொரில்லா யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்கான செயல்பாடுகளில் இறங்கியுள்ள மாவோயிஸ்டுகள்தாம் அரசுக்கு அச்சுறுத்தல்களாக இருக்கின்றனர்; அவர்களைத்தான் இந்திய அரசுக்கு மிகப் பெரிய அபாயம்

என்று கூறி, அதனை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் மத்தியமாநில ஆயுதப் படைகளைக் களமிறக்கியுள்ளனர் என்கின்றனர்.

உண்மைதான், மாவோயிஸ்டுக் கட்சியின் இந்த வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மைதான், ஒரே ஒரு நிபந்தனையுடன்! அதாவது வண்டியில் பூட்டப்படும் குதிரையைப் போல கண்பட்டை அணிந்து கொண்டு அரசியல்சித்தாந்த விசயங்கள் எதையும் கண்டுகொள்ளாதவாறு பார்வையைக் குறுக்கிக் கொள்ள வேண்டும்; சுத்த இராணுவவாதம் என்ற ஒரு வழிப்பாதையில் விரைந்து பயணம் மேற்கொள்ள வேண்டும். ஆயுதபலம், ஆயுதப் போராட்டம் என்ற வகையில் புதிய ஜனநாயகம் அமைப்பு இந்திய அரசுக்கு உடனடி அச்சுறுத்தலாக இல்லை என்பது உண்மைதான்! அதேபோல, ஆயுதபலம், ஆயுதப் போராட்டம் என்ற இராணுவ ரீதியில் இந்திய அரசுக்கு மாவோயிஸ்டு கட்சி உடனடி அச்சுறுத்தலாக உள்ளது; அக்கட்சியைத்தான் மிகப்பெரிய அபாயமாக அறிவித்து மத்திய, மாநில அரசுகள் ஆயுதப் படைகளைக் களமிறக்கியுள்ளனர் என்பதும் உண்மைதான்.

ஆனால், இவற்றையே தனது உண்மையான இயக்க வளர்ச்சி, செயல்பாடு, மக்கள் ஆதரவு ஆகியவற்றுக்கான அளவுகோலாக வைத்து மாவோயிஸ்டு கட்சி நம்புமானால், வாதிடுமானால் அதைவிட முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. 2000ஆம் ஆண்டு பாலக்கோட்டில் இரவீந்திரன் படுகொலை; 2002 நவம்பர், சிவா படுகொலை ஊத்தங்கரை சம்பவம்; 2007 பெரிய குளம் முருகமலை சம்பவம் மற்றும் வருசநாடு கைதுகள் ஆகியவற்றை வைத்து அரசும், போலீசும், செய்தி ஊடகங்களும் எவ்வாறு ஊதிப் பெருக்கி, பீதியூட்டி வருகின்றன என்பதை மாவோயிஸ்டு கட்சியினரே ஒப்புக் கொண்டுள்ளனர். அதைப்போல முன்பு ஆந்திரா மகாராட்டிரா, இப்போது சட்டிஸ்கர், பீகார், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் அக்கட்சியினர் நடத்தும் சில தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து எதிரிகள் மிகைப்படுத்தி ஊதிப் பெருக்காமல் யதார்த்தமாக, உள்ளபடிக்கே கூறுகிறார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியுமா?

சில இலகுவான எதிரி இலக்குகளைத் தாக்குவது, அதைத் தொடர்ந்து அரசின் ஆயுதப் படைகள் நடத்தும் வேட்டை, அரசும் செய்தி ஊடகங்களும் ஊதிப் பெருக்கிச் செய்யும் பிரச்சாரம் ஆகியவற்றை மட்டும் அடிப்படையாக வைத்து முடிவு செய்வது என்றால் இசுலாமியப் பயங்கரவாதிகள், தமிழினத் தீவிரவாதக் குழுக்கள், ஏன் வீரப்பன் போன்ற கிரிமினல்கள் கூட தங்கள் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியும்.

இப்படிச் சொல்லுவதால் மாவோயிஸ்டு கட்சியினர் ஆத்திரப்படக் கூடும். மார்க்சிய லெனினிய மாவோயிச சித்தாந்த அடிப்படையில் உயர்ந்த நோக்கத்துக்கும் இலட்சியத்துக்கும் இரத்தம் சிந்தி தியாகங்கள் புரிந்து ஆயுதப் போராட்டம் நடத்தும் தங்களை எப்படி அவர்களோடு ஒப்பிட்டு எழுதலாம் என்று கேட்கவும், பாயவும் கூடும். ஆனால் உண்மை இதுதான். அரசு தடை செய்திருக்கிறது,

அரசு அனுமதிக்கவில்லை என்ற காரணத்தைக் கூறி தமது அரசியல் சித்தாந்தத்தையும், உயர்ந்த நோக்கத்தையும் இலட்சியத்தையும் இரகசியமாக வைத்துக் கொண்டு, சில இராணுவ ரீதியிலான தயாரிப்பு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு விட்டு, அரசின், ஆளும் வர்க்க செய்தி ஊடகங்களின் பிரச்சாரங்களுக்கு ஏகபோக ஒழுங்கும் உரிமையும் வழங்கி விட்டு, அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட்ட பிறகு விளக்கமளிக்கும் ‘‘புரட்சிகர‘ கடமையை நிறைவேற்றுபவர்களை மக்கள் வேறுமாதிரிப் பார்க்கமாட்டார்கள் என்பதைத்தான் கூறுகிறோம்.

அரசியல் ரீதியில் மக்கள் மத்தியில் வேரூன்றாது, இராணுவ ரீதியிலான தாக்குதல்களில் மட்டும் ஈடுபடும் இயக்கம் மகாராட்டிரம், ஆந்திராவில் செய்ததைப் போல அரசுக்கு கையாள முடியாததல்ல; தாமே ஊதிப் பெருக்கிச் சொல்லும் ஒரு இயக்கத்தின் ஆயுதபலம், ஆட்பலம் ஆகியவற்றைப் பார்த்து அஞ்சுவதை விடவும், அந்த இயக்கத்தின் அரசியல்சித்தாந்த இலட்சியங்களும் நோக்கங்களும் மக்கள் மத்தியில் வேரூன்றி விடுவதைக் கண்டுதான் அரசு அஞ்சுகிறது. இதைத்தான் புதிய ஜனநாயகம் வலியுறுத்துகிறது.

இந்த உண்மை மாவோயிஸ்டு கட்சிக்கும் தெரியும். ஆனாலும், மக்கள் திரள் அடித்தளம் இல்லாமல், அதைப் பெறுவதற்கான வகையிலான நடைமுறையில்லாமல், சுத்த இராணுவக் கண்ணோட்டத்தில் சாகச செயல்களில் ஈடுபடுவதை பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி நியாயப்படுத்துகின்றனர்.

‘‘ தமது செயல்கள் மக்கள் திரள் அடித்தளமில்லாத, இரகசிய கொரில்லாக் குழுக்களின் சாகசச் செயல்கள்தாம்‘‘ என்கிற உண்மையை மூடி மறைப்பதற்காக ஒவ்வொரு தாக்குதல்களிலும் நூற்றுக்கணக்கான கொரில்லாக்கள் பங்கேற்பதாகவும், ஆயிரக்கணக்கான கொரில்லா வீரர்களைக் கொண்ட மக்கள்

விடுதலை கொரில்லா இராணுவத்தைக் கட்டியிருப்பதாகவும் எண்ணிக்கைக் கணக்குக் காட்டுகிறார்கள். இந்தக் கணக்கு இன்னும் ஆயிரம், இட்சம் என்று பெருகினால்கூட அவை மக்கள் திரள் அடித்தளத்தைப் பெற்றதாகிவிடாது என்பதுதான் உண்மை!

மேலும் இந்த உண்மைக்கு ஈடுவைப்பதற்காக அரசின் கொடூரமான அடக்குமுறை, பயங்கரவாத நடவடிக்கைகள், தோழர்களின் இரத்தம் சிந்தும் உயிர்த்தியாகங்கள் பற்றி திரும்பத் திரும்ப எழுதிச் சமாளிக்கிறார்கள். அவை அப்படித்தான் இருக்கும், வேறுமாதிரி இருக்குமா, என்ன? ஆனால் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நடத்துவதற்கான மக்கள் திரள் அடித்தளத்தைப் பெற்றதற்கான, பெறுவதற்கான நடைமுறை அவர்களிடம் இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை.

## புரட்சிப் பாதை: பு.ஜ.வின் நிலையும் மாவோயிஸ்டுகளின் புளுகும்

**மக்கள்** திரள் அடித்தளத்தைப் பெறாமலேயே அதற்கான முயற்சிகள் ஏதுமின்றியே ஆயுதப் போராட்டத் தயாரிப்பு, ஆட்களையும் ஆயுதங்களையும் சேகரிப்பது, பயிற்சி எடுப்பது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் செயலுத்தியை மாவோயிஸ்டு கட்சியின் தலைமை பின்பற்றுவதாக கட்சியின் உள்ளேயும் வெளியேயும் திரும்பத் திரும்ப விமர்சனங்கள் வந்த பிறகு பின்வருமாறு எழுதுகிறார்கள்.

"புரட்சிகர யுத்தத்திற்கு மக்களை அணிதிரட்டுவது கம்யூனிசப் புரட்சியாளர்களின் முதன்மையான கடமையென்பதால், அவர்களுக்கு காடு, மலை, துப்பாக்கி பயிற்சி என்பதெல்லாம் மிகவும் முக்கியமான தேவைகளாகின்றன. ஆனால் இக்கடமையை வெறும் ஆயுதங்களைக் கொண்டு நிறைவேற்றிவிட முடியாது என்பதும், மக்களைப் பல்வேறு அரசியல், பொருளியல், சமூகக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களின் மூலமாகவும், அரசியல் ரீதியில் அணி திரட்டுவதன் மூலமாகவும் செய்ய வேண்டும் என்பதும் மாவோயிஸ்டுகளின் நிலைப்பாடாகும்." (போராளி வெளியீடு, பக்.31)

“மக்கள் ஆதரவு, அடித்தளம் மட்டுமல்லாமல், மக்களின் நேரடியான பங்கெடுப்பில்லாமல் ஒரு புரட்சி வெற்றி பெற முடியாது. அதனால்தான் புரட்சி என்பது மக்களின் திருவிழா என்று மாமேதை தோழர் லெனின் கூறினார். ஆகவே, புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவது, அமைப்பாக்குவது மற்றும் அவர்களை நேரடியாகப் பங்கெடுக்கச் செய்வது புரட்சிக்கு தலைமை தாங்கும் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கடமை.“ (போராளி வெளியீடு, பக். 31).

“ஆயுதக் குழு கட்டி ஆயுதப் போராட்டம் நடத்துவதற்கு, மக்கள் அடித்தளம் ஆதரவு இருக்க வேண்டுமா என்றால் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி இருக்க வேண்டும் என்பதுதான் மாவோயிஸ்டுகளின் நிலைப்பாடு. (போராளி வெளியீடு, பக். 32)

இவ்வாறு பொதுவில் புரட்சிக்கும், குறிப்பாக ஆயுதப் போராட்டத்திற்கும் மக்களை அணிதிரட்டுவதும், அமைப்பாக்குவதும், அவர்களை நேரடியாகப் புரட்சியில் பங்கெடுக்கச் செய்வதும் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி இருக்க வேண்டும் என்பது மாவோயிஸ்டுகளின் நிலைப்பாடாகும் என்று கோட்பாட்டு ரீதியில் ஒப்புக் கொள்ளும் அவர்கள், அடுத்த வரியிலேயே இந்த நிலைப்பாட்டை நிராகரித்து விடுகிறார்கள்.

முதலில், புரட்சிக்கும், ஆயுதப் போராட்டத்திற்கும் மக்கள் ஆதரவு அடித்தளத்தைப் பெறுவதற்கான “புதிய ஜனநாயகம்‘ வகுத்துக் கொண்டுள்ள அரசியல் வழிமுறைகள் வலது சந்தர்ப்பவாதமென்று நிரூபிப்பதற்காக முயன்று, அவசியமான சரியான மார்க்சியலெனினியத் தலைமை முறை பற்றிய அனைத்துக் கோட்பாடுகளையும் நிராகரித்து விடுகிறார்கள். “அரசியல் போராட்டத்தின் உயர்ந்த வடிவம்தான் ஆயுதப் போராட்டம், அரசியல் போராட்ட அனுபவத்தினூடாக ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்கள் உணர வேண்டும்“ என்ற மார்க்சியலெனினியக் கோட்பாட்டைப் பின்வருமாறு கொச்சைப்படுத்தி நிராகரித்து விடுகிறவர்கள்.

“மொத்தத்தில், பு.ஜ. வகுத்துள்ள புதிய சூத்திரம் மாலெமாவை திரித்து புரட்டும் ஒரு சந்தர்ப்பவாத சூத்திரமே. இது அரசியல் போராட்டம் படிப்படியாக, ஆயுத போராட்டமாக மாறும் என்ற பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைப்பதன் மூலம், பாய்ச்சல் மூலமான வளர்ச்சி என்ற மார்க்சிய கோட்பாட்டை மறுக்கிறது. மறுபுறம் மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்த

அரசியல் போராட்ட அனுபவங்களை அடிப்படையாக்குவதன் மூலம், புறநிலையில் தோன்றக்கூடிய புரட்சிகர சூழலை பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்கும் மலட்டுக் கோட்பாடாக உள்ளது. அரசியல் போராட்டத்தை முதிர்ச்சியடைய செய்ய (எப்போது முதிர்ச்சியடையும்?) நிரந்தரமாக முயற்சித்துக் கொண்டிருப்பதும், மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ள (இதை எப்படி முடிவு செய்வது?) அரசியல் போராட்ட அனுபவம் பெற வைக்க காலாகாலத்துக்கு முயன்று கொண்டிருப்பதுதான் இந்த சந்தர்ப்பவாதக் கோட்பாட்டின் விளைவாக இருக்க முடியும். " (போராளி வெளியீடு, பக்.26)

மேலும் புதிய ஜனநாயகம் அமைப்பினர் முன் வைக்கும் போர்த்தந்திரம், செயல்தந்திரம் பற்றிய கோட்பாடுகளை வேண்டுமென்றே திட்டமிட்டு, மோசடியாகத் திரித்துப் புரட்டி, அவை முதலாளிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் நீண்டகாலத் தயாரிப்பைத் தொடர்ந்து நடத்தப்படும் நாடு தழுவிய பேரெழுச்சிப் பாதை என்றும் ஒரு பச்சைப் பொய்யை மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. இந்தப் பச்சைப் பொய்யை ஆதாரமாக வைத்து, நாடு தழுவிய அளவில் மக்கள் ஆதரவைத் திரட்டியபிறகுதான் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க முடியும் என்று கோட்பாட்டை வகுத்துக் கொண்டு ஆயுதப் போராட்டத்தைக் கண்காணாத தூரத்துக்குத் தள்ளி வைத்து விட்டதாக வேறு அவதூறும் செய்கிறது.

இவ்வாறுதான் முன்னாள் மக்கள் யுத்தக் கட்சி மற்றும் இன்னாள் மாவோயிசக் கட்சித் தலைமை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பு.ஜ. அமைப்பின் கோட்பாடுகள் குறித்து திரித்துப் புரட்டியும், புளுகியும் அவதூறு செய்து வந்தது. ஆனால், அதே கோட்பாடுகளின் பகுதிகளைத் "திருட்டுத்தனமாக" தனது ஐக்கியம் மற்றும் போராய ஆவணங்களில் புகுத்திக் கொண்டது. அது தெரியாமல் அக்கட்சியின் தமிழ் மாநிலக் குழு தொடர்ந்து, போர்த்தந்திரம், செயல்தந்திரம் பற்றிய பு.ஜ. அமைப்பின் நிலைப்பாடுகள், குறிப்பாக பிரதானத் தாக்குதல் திசைவழி, புரட்சி அலையேற்றம், அலையிறக்கம், பிரச்சாரம், கிளர்ச்சி, கட்டளை மற்றும் ஆணை ஆகிய கட்டங்களிலான இயக்க வளர்ச்சி போன்றவை முதலாளிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியன; இந்தியா போன்ற நாடுகளுக்கு இவையெல்லாம் பொருந்தாதவை; அதைப் பற்றி எங்கேயும் மாவோ கூறவில்லை, மாறாக அந்தக் கொள்கை சீன நிலைமைகளுக்கு எப்படிப் பொருந்தாது என்றுதான் கூறியுள்ளார் என்றும் பச்சையாகப் புளுகினார். புரட்சிகர அலையேற்றம், அலையிறக்கம் என்பதெல்லாம் வார்த்தை ஜாலங்கள் என்றும், புரட்சிகர அலையேற்றத்திற்காக

இலவுகாத்த கிளியாக ஆயுதப் போராட்டத்தை துவக்காமல் காத்திருக்கின்றனர் என்றும் கிண்டல் செய்தார்கள். (ஆதாரம்: ‟போகாத ஊருக்கு வழி சொல்லும் மா.அ.க.வின் அரசியல் பாதையும், இராணுவப் பாதையும்‟, போராளி வெளியீடு, பக். 61, 64)

இதுபற்றி சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்பே பு.ஜ. அமைப்பு கேட்டிருந்தது, ‟அரசியல் யுத்த தந்திரம், செயல்தந்திரங்கள் பற்றிய மா.அ.க.வின் நிலைப்பாடுகளைக் கொல்லைப்புற வாசல் வழியே (மாவோயிசக் கட்சி) சேர்த்துக் கொண்டிருக்கிறது. இப்போது ம.யு. தமிழ் மாநிலக் குழு தோழர்கள் மா.அ.க.வுக்கு எதிரான வெளியீட்டில் எழுதியுள்ள அவதூறுகளை நேர்மையாக ஒப்புக் கொள்வார்களா, அல்லது தலைமை கடைப்பிடித்த கபடத்தனத்தைப் பின்பற்றுவார்களா என்று தெரியவில்லை.‟ (‟சாகச வழிபாடு சந்தர்ப்பவாத வழிமுறை போவது எங்கே?‟, பக். 107) என்று பு.ஜ. அமைப்பு கேட்டிருந்தது.

மாவோயிசக் கட்சியின் தமிழ் மாநிலக் குழு, தனது கட்சியின் இந்தக் கோட்பாட்டு மோசடி குறித்து நேர்மையாக நடந்து கொள்ளாததுடன் தலைமையின் அதே கபடத்தனத்தைப் பின்பற்றுவது இப்போது தெரிகிறது. அதாவது பு.ஜ. அமைப்பின் செயல்தந்திர நிலைப்பாடு, முதலாளிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடிய நாடு தழுவிய பேரெழுச்சிப் பாதையிலானதென்று தொடர்ந்து புளுகி வருகிறது.

நீண்டகாலத் தயாரிப்பைத் தொடர்ந்து நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சி பாதை அதாவது நாடு தழுவிய அளவில் மக்கள் ஆதரவைத் திரட்டிய பிறகுதான் ஆயுதப் போராட்டத்தை தொடங்குவது என்பது பு.ஜ. அமைப்பின் நிலைப்பாடே கிடையாது. இதுதான் நமது நிலைப்பாடு என்பது மாவோயிஸ்டுகள் வேண்டுமென்றே திரித்து, இட்டுக் கட்டிச் சொல்வதாகும். ஏற்றதாழ்வான வளர்ச்சியுடைய நமது நாட்டில் மக்களைத் திரட்டுவதும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதும் காலத்தாலும் இடத்தாலும் ஏற்றத்தாழ்வாகவே இருக்கும் என்பதுதான் நமது நிலைப்பாடாகும். நாட்டின் எங்கு வேண்டுமானாலும், எப்போதும் ஆயுதப் போராட்டம் தொடங்கலாம் என்ற மாவோயிஸ்டுகளின் நிலைப்பாடுதான் சமச்சீரான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டமாகும்.

ரசியாவிலும், சீனாவிலும் பின்பற்றப்பட்டதைப் போல ஒரு குறிப்பிட்ட போர்த்தந்திரத்தின் சில போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் மற்றொரு

போர்த்தந்திரத்தில் அவசியமானால் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும்; இந்த முறையில் கொரில்லா மண்டலங்களையும், தளப்பிரதேசங்களையும் நிறுவுவதற்கான முதற்படியாக உள்ளூர் ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகளை நடத்துவது முன்தேவையாக உள்ளன என்பதுதான் பு.ஜ. அமைப்பின் நிலைப்பாடே தவிர, நாடு தழுவிய பேரெழுச்சிக்குத் தயாரிப்பது என்பது பு.ஜ. நிலைப்பாடே கிடையாது. (ஆதாரம்: மேற்படி நூல், பக். 171). மாவோயிஸ்டுகள்தாம் நமது நிலைப்பாட்டைத் திரித்துச் சொல்லி அவதூறு செய்து வருகிறார்கள்.

அதேசமயம், ஆயுதக் குழு கட்டி, ஆயுதப் போராட்டம் நடத்துவதற்கு மக்கள் அடித்தளம், ஆதரவு இருக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளும் மாவோயிஸ்ட் கட்சி கூறும் வழிமுறையோ, வெளியில் ஒன்றும் இரகசியமாக எழுதி வைத்துக் கொண்டுள்ள கட்சி ஆவணத்தில் வேறொன்றாகவும் இருக்கின்றது. அந்த உண்மையை ஆதாரத்துடன் பார்ப்போம்.

## அரசியலுக்காகத்தான் ஆயுதமா? ஆயுதத்துக்காக அரசியலா?

"**பகுதியளவில்** மக்களின் அரசியல் அதிகார அலகுகளை கட்டியமைத்து விடுதலை தளப் பிரதேசத்தை நிறுவுவதே புரட்சிக்கு தலைமைத் தாங்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் முதன்மையான மையக் கடமையாகும். அதற்காக மக்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தை நடத்தி, ஆளும் வர்க்கங்களையும் எதிரியின் ஆயுதப் படைகளையும் பகுதியளவில் வீழ்த்த வேண்டும். இதனை நிறைவேற்ற வேண்டுமெனில் மக்கள் அடித்தளம், ஆதரவு மட்டுமின்றி ஆயுதப் போராட்டத்தில் அவர்களின் நேரடியான பங்களிப்பும் அவசியம்.

எனவே புரட்சிகர அரசியலின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்திற்காக அணிதிரட்டுவது உடனடியாக செய்யப்பட வேண்டிய கடமையாகும். இதற்கு ஆயுதப் போராட்டம் நடத்துவதற்கு சாதகமான காடுகளிலும், மலைகளிலும் மக்கள் வாழக்கூடிய மூலஉத்தி ரீதியான பகுதிகளை தேர்வு செய்து அங்குள்ள வர்க்க முரண்பாடுகளின் குறிப்பான வடிவங்களை ஆய்வு செய்வதும், மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தி புரட்சிகர அரசியலின் அடிப்படையில் அவர்களை அமைப்பாக்குவதும், நிலப்பரப்பை ஆய்வு செய்வதும் அவசியம்.

இதனை வெளிப்படையான புரட்சிகர மக்கள் திரள் அமைப்புகளின் மூலம் செய்வதா அல்லது எதிரிக்கு அம்பலமாகாத வகையில் இரகசியமாக செய்வதா என்பது அந்த குறிப்பான பகுதியில் / மாநிலத்தில் புரட்சிகர அமைப்பின் மீது அரசு எத்தகைய அணுகுமுறையை மேற்கொள்கிறது என்பதைப் பொருத்தும் ஒட்டு மொத்தமாக நாட்டில் நிலவும் புரட்சிகர சூழலின் தீவிரத்தன்மையை பொருத்தும் உள்ளது.‘‘ ‘‘புரட்சிகர மக்கள் திரள் அமைப்புகளும், கட்சியும் தடை செய்யப்பட்டு, வெளிப்படையாக செயல்பட முடியாத சூழலில் ஆயுதப் போராட்டத்திற்கு தேவையான மக்கள் அடித்தளம், மற்றும் இதர தயாரிப்புகள் இரகசியமாக செய்யப்பட வேண்டும்.‘‘ (போராளி வெளியீடு, பக். 32,33 மற்றும் 34).

இவையெல்லாம் புரட்சிகர அணிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் மாவோயிஸ்டு கட்சி தான் வகுத்துக் கொண்டிருக்கும் கோட்பாடும், நடைமுறையும் ஏதோ செம்மையானது, சீரானது, அறிவியல் பூர்வமானது, மாவோவின் மக்கள் யுத்தப் பாதை அடிப்படையிலானது என்று தோன்றுவதற்காக தனது வெளியீட்டில் சொல்லப்பட்டிருப்பன.

ஆனால், அதன் உட்கட்சி ஆவணமோ, மக்களைத் திரட்டுவதற்கும், ஆயுதப் போராட்டத்தை தொடங்குவதற்கும் ‘‘தலையால் நடக்கும்‘‘ பின்வரும் கோட்பாட்டையும் வழிமுறையையும் முன் வைக்கிறது:

‘‘சீனத்தைப் போல நமது நாட்டில் யுத்தம் முதன்மை போராட்ட வடிவமாகவும் இராணுவம் முதன்மை அமைப்பு வடிவமாகவும் உள்ளது. ஆகவே இங்கும் தொடக்கத்திலிருந்தே ஆயுதப் போராட்டத்தின் மூலம் மக்களை அணிதிரட்டி, புரட்சிகர யுத்தத்தை வளர்த்தெடுத்து, பகுதியளவில் அதிகாரத்தைக் கைப்பற்றி அதனை பரந்த பகுதிகளுக்கு விரிவுபடுத்தி, நகரங்களை சுற்றி வளைத்து நாடளவில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இங்கு ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் திரள் போராட்டங்களையும், மக்கள் படை கட்டுவதற்கு மக்கள் திரள் அமைப்புகளையும் முன் நிபந்தனையாக்குவது கூடாது; பகுதியளவில் எழுச்சிக்கான தயாரிப்புகளை செய்து கொரில்லாப் போரின் மூலம் அதிகாரத்தை வென்றெடுத்து பின்னர் அதைப் போலவே பிற பகுதிகளுக்கு விரிவடைய செய்வதும் தவறானது.

‘‘உள்ளூர் எதிரிகளின் தாக்குதல்கள் மற்றும் அரசின் ஒடுக்குமுறை இயக்கத்திற்கு எதிராக எதிர்ப்பை கொடுக்க, சிவப்பு எதிர்ப்பு போராட்டக்

காலத்திலேயே நாம் பகுதி கொரில்லா ஆயுதக் குழுக்களையும், சிறப்பு கொரில்லா குழுக்களையும் மக்கள் குடிபடையையும் அமைப்பதோடு மட்டுமல்ல, கிராம மக்களையும் சாத்தியமான அளவுக்கு ஆயுதபாணியாக்குவதுடன் அவர்களுக்கு பயிற்சி தரவேண்டும்.

"நக்சல்பாரி பேரெழுச்சிக்குப் பின்னர் ஆளும் வர்க்கங்களின் அடித்தளத்தை தகர்த்தெறிவதை நோக்கமாக கொண்டு நடத்தப்பட்டுள்ள மக்கள் திரள் இயக்கங்களின் அனுபவம் என்ன? போராட்டம் துவக்கப்பட்டவுடன் அல்லது ஒரு சில மாதங்களுக்குள் அரசின் கொடூரமான அடக்குமுறையை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகின்றது. நக்சல்பாரி முதற்கொண்டு இதுவரையில் இந்தியாவின் எந்த மாநிலத்திலும், எந்த மூலையில் நடத்தப்பட்ட போராட்டமாக இருப்பினும் அதன் அனுபவம் இதையே நிரூபிக்கின்றது.

"ஆகவே, ஆயுதப் போராட்டம் முதன்மை வடிவமாகவும் கொள்வதுதான் சரியானது. அம்மாதிரியான சீனா, வியத்நாம், பிலிப்பைன்ஸ், பெரு, நேபாளம் போன்ற நாடுகளின் அனுபவங்களில் இருந்து பார்க்கும்போது சிறிய அலகுகளில் முதலில் ஆயுதக் குழுக்களைக் கட்டி முன்னேறுவதுதான் சரியானதென்று காட்டுகின்றன.

"தொடக்கத்திலிருந்தே ஆயுதக் குழுக்களைக் கட்டி நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் மக்களை ஆயுதப் போராட்ட அரசியலுக்கு அணிதிரட்ட முடியும். மக்கள் யுத்தத்தை நடத்துவதற்கான மக்கள் படையை கட்ட முடியும். கிராமப்புறங்களில் வர்க்கப் போராட்டத்தை துவங்கும்போதே பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் மற்றும் அரசின் அடக்குமுறைக்கு எதிராக எதிர்த்தாக்குதல் நடத்துவதற்கு ஆயுதக் குழுக்களை கட்டுவது மிகவும் அவசியமாக உள்ளது.

"இந்தியாவில் நமது கட்சியின் அனுபவத்தை பார்த்தோமேயானால் நாம் ஏற்கெனவே கூறிய ஜகித்யால் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசுப் படைகள் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டதை எதிர்த்து 1979இல் நான்கு ஆயுதக் குழுக்கள் கட்டப்பட்டன. இது வளர்ச்சியடைந்து தண்டகாரண்யாவிற்கும் பின்னர் நாட்டின் பல பாகங்களுக்கும் விரிவடைந்தது. கடந்த 25 ஆண்டுகளில் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்து வருவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான கொரில்லா வீரர்களையும்

பல்லாயிரக்கணக்கான மக்கள் குடிப்படையினரை கொண்ட மக்கள் கொரில்லா விடுதலைப் படையாக வளர்ச்சியடைந்துள்ளது.

"இவையனைத்தும் நமக்கு தெளிவுபடுத்தும் விசயம் என்னவெனில் மக்கள் இராணுவம் கட்டப்படும்பொழுது எத்தனை வீரர்களை கொண்டு கட்டப்பட்டாலும், எத்தனை துப்பாக்கிகளைக் கொண்டிருந்தாலும், நீண்டகால மக்கள் யுத்தப் பாதையில் உறுதியாக நின்று, ஆயுதப் போராட்டத்தை உறுதியாக நடத்திக் கொண்டு எத்தனை இழப்புகளும், கொடும் அடக்குமுறைகளும் வந்தாலும் மக்களை அணிதிரட்டி புரட்சிகர இயக்கத்தை முன்நடத்தி வந்தால் அது வளர்ச்சிடையவது நிச்சயம். அந்தந்த நாட்டின் குறிப்பான நிலைகளுக்கேற்றவாறு, ஏற்ற இறக்கங்களை கண்டு இன்று வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டு வருகின்றது.' (ஆதாரம்: "வலது சந்தர்ப்பவாத கருத்துக்களை முறியடிப்போம்! நீண்டகால மக்கள்யுத்தப் பாதையை உயர்த்திப் பிடிப்போம்!'' இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ் மாநிலக் குழு வெளியீடு, பக். 3639, சுருக்கப்பட்டது).

கிராமப்புறங்களில் கூலிஏழை விவசாயிகளின் கொரில்லாக் குழுக்களைக் கட்டி வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பதன் மூலம் கொரில்லாப் போரையும் மக்கள் யுத்தத்தையும் தொடங்கி முன்னேற முடியும் என்ற லின்பியாவோ சாருமஜூம்தாரின் கண்டுபிடிப்பின் பரிணாம வளர்ச்சிதான் இந்த இ.க.க.(மாவோயிஸ்ட்) கட்சியின் வழிமுறை. உண்மையில் சேகுவேரா, ரெஜிஸ்தேப்ரே, கார்லோஸ் மாரிகெல்லா போன்ற குட்டி முதலாளிகளின் இந்த கொரில்லாப் போர்முறையை மாவோயிசம் என்ற பெயரில் இவர்கள் முன்மொழிகிறார்கள்.

குட்டி முதலாளித்துவ இராணுவவாதத்தை நடைமுறைப்படுத்திக்கொண்டு தாங்கள் மாவோவின் மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவதாகவும் தங்களை மாவோயிஸ்ட் கட்சி என்று கூறிக்கொள்வதும்தான் வேடிக்கை, வினோதமாகும்!

மூன்றாண்டுகளுக்கு முன்பே இ.க.க.(மாவோயிஸ்ட்) தமிழ் மாநிலக் குழுவிடம் பின்வருமாறு நாம் கோரியிருந்தோம். "ம.யு. தமிழ்மாநிலக் குழு தமிழகத்தில் தானே செயல்படுகிறது! அது எதற்கெடுத்தாலும் ஆந்திராவைச் சான்று காட்டுவதை தவிர்த்து, தான் போதிக்கும் வழிமுறைகளை, தமிழ்நாட்டில் அமல்படுத்திய அனுபவத்தைச் சொல்லியிருந்தால், மா.அ.க.வுக்கும் புரட்சிக்கும் பயன்படக்கூடியதாக இருந்திருக்கும்.''

மீண்டும் இதையே கோருகிறோம். 1995-96 முதல் இரவீந்திரன், பிறகு சிவா, தற்போது மகாலிங்கம் தலைமையில் ஆயுதக் குழுக்களைக் கட்டி ஆயுதப் போராட்ட அரசியலுக்கு மக்களை அணிதிரட்டவும் ஆயுதப் போராட்டத்தைத் துவங்கவும் மக்கள் யுத்தத்தை விரிவுபடுத்தவும் முயன்று வருகிறார்கள். பழைய வரலாறு ஒருபுறம் இருக்கட்டும், இந்த பத்தாண்டுகளாக நடக்கும் ஆயுதப் போராட்டத் தயாரிப்பு நடவடிக்கைகள் கருச்சிதைவாகவே முடிகின்றனவே, அந்த அனுபவத்தைத் தொகுத்துத் தருவீர்களானால் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

## இணைப்பு: நக்சல்பாரி "அபாயம்": அரசை அச்சுறுத்துவது ஆயுதமா, அரசியலா? (புதிய ஜனநாயகம், ஆகஸ்டு 2007இல் வெளியான கட்டுரை)

**கடந்த** ஜூன் 25ஆம் தேதியன்று பெரியகுளம் முருகன்மலைப் பகுதியில் மாவோயிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த 3 தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பழனிவேல், வேல்முருகன், முத்தமிழ்ச்செல்வன் என்ற இந்த 3 பேரிடமிருந்து துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் போன்ற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக போலீசு கூறுகிறது. மற்ற சிலர் தப்பிவிட்டதாகக் கூறி, சிலருடைய புகைப்படங்களை ஊடகங்களில் வெளியிட்டிருக்கிறது, போலீசு. ஜூலை 8ஆம் தேதியன்று இரவு சுந்தரமூர்த்தி, கார்த்திக், ஈஸ்வரன் ஆகியோர் திருப்பூரில் கைது செய்யப்பட்டு, போலீசு விசாரணைக்குப்பின் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தப்பியவர்களைப் பிடிப்பதற்கு மதுரை மற்றும் பிற நகரங்களிலும் "கியூ" பிரிவு உளவுத்துறைப் போலீசு வீடுவீடாகச் சோதனை நடத்தியிருக்கிறது.

வீரப்பனின் பிணத்தைச் சுட்டுக் கைப்பற்றிய விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் எங்கும் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது.

"தமிழகமெங்கும் 70 பேர் கொண்ட 70 ஆயுதக் குழுக்கள்!", "பெரியகுளத்தில் ஏ.கே47 துப்பாக்கிகள், ஆயுதப் புதையல்கள், லேப் டாப்

கம்ப்யூட்டர்கள்'', ''ஆயுதப்படையில் சேருவதற்குத் தயாராக 600 மாணவர்கள்'' என்று விஜயகாந்த் சினிமாவை விஞ்சும் வகையில் திரைக்கதை எழுதுகின்றன, பத்திரிகைகள். ''நக்சல் வேட்டை' என்று போலீசு அராஜகத்தைக் கொண்டாடுவது, விஜயகுமாரையும் உளவுத் துறை போலீசு அதிகாரிகளையும் ஏதோ உயிருக்குத் துணிந்த வீர சாகச நாயகர்களாகச் சித்தரிப்பது, கைது செய்யப்பட்ட தோழர்களை ''அவன், இவன்' என்று ஏகவசனத்தில் எழுதுவது என நாலாந்தரமான போலீசு எடுபிடிகளாகவும் பரபரப்புக்காகப் பச்சைப் பொய்களைப் புனைந்து எழுதும் பேனாத்தரகர்களாகவுமே பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

மாவோயிஸ்டுகள் தமிழகத்தைச் சூழ்ந்திருக்கும் மாபெரும் அபாயம் போல ஒரு சித்திரம் திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. எனினும் இந்தத் ''தேடுதல் வேட்டை'க்குத் தலைமை தாங்கும் விஜயகுமார், நாஞ்சில் குமரன் போன்ற போலீசு அதிகாரிகள் ''அச்சப்படும் அளவுக்கு தமிழகத்தில் மாவோயிஸ்டுகள் வளர்ந்துவிடவில்லை'' என்று கூறுகின்றனர். கியூ பிரிவு எஸ்.பி. அசோக்குமார் ''தமிழகத்தில் மாவோயிஸ்டுகளின் எண்ணிக்கை 25 முதல் 35 வரை இருக்கலாம் என்பது எங்கள் கணக்கு'' என்று பேட்டி கொடுக்கிறார். ''கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்கள் மிகச் சாதாரணமானவை'' என்றும் போலீசே கூறுகிறது.

பிறகு ஏன் இந்த ஆரவாரம்? பெரியகுளத்தில் வேட்டை, குற்றாலத்தில் வேட்டை, கொடைக்கானலில் வேட்டை, தருமபுரியில் வேட்டை என்று விஜயகுமாரின் காட்டு சீன் ஸ்டில்கள், சினிமா ஸ்டில்களைப் போல அன்றாடம் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் வழங்கப்படுவது ஏன்? பெரியகுளத்தில் நிரந்தரமான அதிரடிப்படை முகாம் எதற்கு?

இது போலீசின் வழக்கமான விளம்பர மோகம் அல்ல; மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் அரச பயங்கரவாதம். ''நக்சல்பாரி' என்ற சொல்லைக் கேட்டாலே மக்களுக்கு அதிரடிப் படையின் கொடூரமுகம் நினைவுக்கு வரவேண்டும் என்பதும், அவர்கள் அஞ்சி நடுங்கி ஒதுங்க வேண்டும் என்பதும்தான் இந்த நடவடிக்கையின் முதல் நோக்கம்.

இரண்டாவதாக, இது தீவிரவாத ஒழிப்பில் மன்னனை விஞ்சிய ராஜவிசுவாசியாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ள கருணாநிதி மேற்கொள்ளும் முயற்சி. ''தமிழகத்தைத் தீவிரவாத அபாயத்திலிருந்து காப்பாற்றி அமைதியான

வாழ்க்கையை அளிக்கும் வல்லமை எனக்கு மட்டும்தான் உண்டு. கருணாநிதி ஆட்சிக்கு வந்தால் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதுடன், சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துவிடும்'' என்பது ஜெயலலிதா நிரந்தரமாக முன்வைத்துவரும் பாசிச அரசியல். துக்ளக் முதல் இந்து வரையிலான பார்ப்பனப் பத்திரிகைகளால் வழிமொழியப்படும் பிரச்சாரமும் இதுதான்.

தற்போது ஜெயலலிதாவின் ஆசி பெற்ற விஜயகுமாரை ``நக்சல் ஒழிப்பு நடவடிக்கையின்' தலைவராக நியமித்திருப்பதன் மூலம் ``வசிட்டன் வாயால் பிரம்மரிஷிப் பட்டம்' வாங்கத் துடிக்கிறார், கருணாநிதி. மேலும் பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக தமிழகத்தைப் பேணுவதற்கும், ஆளும் வர்க்கங்களின் மனம் கவர்ந்த அமைதிப் பூங்காவாக மாநிலத்தை ``மார்க்கெட்டிங்' செய்வதற்கும் நக்சல் வேட்டை என்னும் இந்த ஊதிப்பெருக்கப்பட்ட நடவடிக்கை தி.மு.க. அரசுக்குத் தேவைப்படுகிறது.

போலீசைப் பொறுத்தவரை தனது கேள்விக்கிடமற்ற அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கும், தனது கிரிமினல் நடவடிக்கைகளை மறைத்துக் கொள்வதற்கும் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் அது பயன்படுத்திக் கொள்கிறது. மிகவும் அபாயகரமான பணியில் இராப்பகலாக ஈடுபட்டிருப்பதைப் போன்ற தோற்றத்தை மக்களிடம் ஏற்படுத்துவதற்காகவே, காடுகளிலும் மலைகளிலும் ``அவுட்டோர் ஷூட்டிங்'' நடத்துகிறது. தான் நடத்திய, நடத்தப் போகிற எல்லா ``போலி மோதல்' கொலைகளையும் மறைப்பதற்கான திரைச்சீலைகளாக இவற்றைப் பயன்படுத்துகிறது.

இத்தனை பயங்கரமாகச் சித்தரிக்கப்படும் பெரியகுளம் சம்பவத்தில் நடந்திருப்பது என்ன? 3 பேர் சில ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குண்டு வெடிப்பு, போலீசுடன் மோதல், உயிரிழப்பு என்று எதுவும் நிகழவில்லை. கைது செய்த போலீசாருக்கோ ஒரு சிராய்ப்புக் காயம் கூட ஏற்படவில்லை. போலீசின் சட்டம் ஒழுங்கு பார்வையின் படியேகூட இது மிகவும் சாதாரணமான குற்றம்தான்.
தினகரன் பத்திரிகை மீது பட்டப்பகலில் போலீசின் முன்னிலையில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். 3 ஊழியர்கள் கொல்லப்பட்டிருந்தும், அந்த வன்முறை வெறியாட்டம் மறுக்க முடியாதவண்ணம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டிருந்தும், ``தாக்குதலுக்குக் கருத்துக் கணிப்புதான் காரணம்'' என்று கூறி, சட்டமன்றத்திலேயே அதனை நியாயப்படுத்தினார், கருணாநிதி.

அண்ணன் அழகிரிக்கு 2% தான் ஆதரவு என்று எழுதியதற்காக ஒரு பத்திரிகை அலுவலகத்தை ஊழியர்களுடன் சேர்த்துக் கொளுத்தலாமாம். அழகிரி ஆதரவாளர்களின் கோபத்துக்கான காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமாம். ஆனால், ஒரு இலட்சம் விவசாயிகளைத் தற்கொலைக்கும், பல ஆயிரம் முஸ்லிம்களையும் தலித் மக்களையும் படுகொலைக்கும், கோடிக்கணக்கான மக்களைப் பட்டினிக்கும் தள்ளும் இந்த அரசமைப்புக்கு எதிராக ஆயுதமேந்துவது தீவிரவாதமாம்!

மூன்று இளைஞர்கள் கையில் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்ற குற்றத்துக்காகத் தமிழகமெங்கும் மாவோயிஸ்டு அமைப்பினர் மீது தேடுதல் வேட்டை நடத்துகிறது போலீசு. சிவகங்கையில் நட்ட நடுவீதியில் ரிமோட் குண்டு வைத்து தி.மு.க. நகராட்சித் தலைவரை தி.மு.க.காரனே கொலை செய்கிறானே, அந்தப் படுகொலைக்கு என்ன காரணம்? அன்று உள்ளாட்சித் தேர்தலையும், இன்று கூட்டுறவுத் தேர்தலையும் ரத்து செய்ய வைத்த வன்முறைக்கான காரணம் என்ன? தமிழ் நாட்டையே கொள்ளைக் காடாக்கி வரும் கழக வீரப்பன்கள் மீது எந்த அதிரடிப்படை ஏவப்பட்டிருக்கிறது?

"நக்சல் ஒழிப்பு' நடவடிக்கையில் காட்டப்படும் இந்தத் தீவிரத்தில் ஒரு சதவீதமாவது "தீண்டாமை ஒழிப்பு', "லஞ்ச ஒழிப்பு', "மதவெறி ஒழிப்பு' நடவடிக்கைகளில் காட்டப்பட்டதுண்டா? காடு மலையெல்லாம் தேடி அலைய வேண்டிய தேவையே இல்லாமல் கண்முன்னால் காட்சி தரும் இந்தக் கிரிமினல் குற்றங்களை ஒழிக்க ஒரு அமைதிப்படையாவது ஏவப்பட்டதுண்டா?

"வன்முறையா மென்முறையா' என்பதல்ல பிரச்சினை. இந்த அரசமைப்பில் ஐக்கியமாகி, அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்னவும், பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தரகு வேலை செய்யவும், மக்கள் சொத்தைக் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொள்ளவும் ஆயுதம் ஏந்தி மோதிக்கொள்வதில் ஆளும் வர்க்கத்துக்கு எந்த ஆட்சேபமும் இல்லை. மக்கள் யுத்தக் குழுவினர் சந்திரபாபு நாயுடுவுக்கு வைத்த குண்டைக் காட்டிலும், சிவகங்கையில் வைக்கப்பட்ட ரிமோட் குண்டுதான் நவீன தொழில்நுட்பம். அவ்வாறிருந்தும் சிவகங்கையில் தேடுதல் வேட்டை கிடையாது, காரணம், இது தி.மு.க. ஆட்சி என்பது மட்டுமல்ல; இத்தகைய வன்முறைகள் எதுவும் ஆளும் வர்க்கத்துக்கு எதிரானவையல்ல என்பதுதான் அடிப்படைக் காரணம்.

மாறாக, ‘‘இந்த கொள்ளைக்கார அரசமைப்பைத் தூக்கியெறிவதற்காக ஆயுதம் ஏந்தவேண்டும்’’ என்று கூறுவதனால்தான், ஜனநாயகத்தின் எல்லாத் தூண்களும் ‘‘தீவிரவாதிகள்‘ என்று முத்திரை குத்தி நக்சல்பாரிகள் மீது பாய்ந்து பிடுங்குகின்றன.

குறிப்பாக, தனியார்மயதாராளமயக் கொள்கைகளை எதிர்த்துக் கிளர்ந்தெழும் உழைக்கும் மக்கள், நாளை கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் அணிதிரண்டு விடுவார்களோ என்ற அச்சம்தான் ஆளும் வர்க்கங்களை நடுங்கச் செய்கிறது. துப்பாக்கிகாடுபயிற்சி என்பதல்ல எதிரிகளின் அச்சத்துக்குக் காரணம். மார்க்சியம்லெனினியம்மாசேதுங் சிந்தனை என்ற கம்யூனிசச் சித்தாந்தம்தான் அவர்களை அச்சுறுத்துகிறது. கம்யூனிசப் புரட்சியாளர்களின் உறுதியும் விடாப்பிடியான முயற்சியும் அவர்களுக்குப் பீதியூட்டுகிறது.

இதனை மறைத்துக் கொண்டு, ‘‘வேலையில்லாத பட்டதாரிகளும் விரக்தியுற்ற இளைஞர்களும்தான் நக்சல்பாரிகளாக மாறிவிடுவதாக‘க் கதையளக்கிறார்கள். ‘‘இந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் நக்சலியம் ஒழிந்துவிடும்‘ என்று கனாக் காண்கிறார்கள். வேலையின்மை, வறுமை காரணமாக நக்சலியம் பரவுகிறது (திருட்டு, விபச்சாரம் போன்ற கிரிமினல் குற்றங்கள் பரவுவதைப் போல) என்று கூறுவதன் மூலம் நக்சல்பாரி அரசியலையே கிரிமினல் குற்றமாகச் சித்தரிக்கிறார்கள்.

விரக்தியுற்றவர்கள்தான் நக்சல்பாரிகளாகிறார்கள் என்ற கூற்று உண்மையாயிருப்பின், தற்கொலை செய்து கொண்ட ஒரு லட்சம் விவசாயிகளும் நக்சல்பாரிகளாகியிருக்க வேண்டும். நக்சல்பாரிகளை உந்தித் தள்ளும் உணர்ச்சி, விரக்தி அல்ல; அது சமூக அநீதிகளுக்கு எதிரான ஆவேசம். அவர்களை வழிநடத்துவது மார்க்சியம்லெனினியம் என்ற அறிவியல் பார்வை. நக்சல்பாரிகள் சமூகத்தைத் தம் தோளில் சுமப்பவர்கள், மக்கள் நலனுக்காகத் தம் சொந்த வாழ்வின் இன்பங்களைத் தாமே முன்வந்து துறப்பவர்கள். நக்சல்பாரிகள் விரக்தியுற்ற இளைஞர்களுமல்ல, கம்யூனிசம் சோற்றால் அடித்தால் செத்துவிழும் கொள்கையுமல்ல.

நக்சல்பாரிகளின் அரசியலைத் தவறு என்று யாராலும் வாதாட முடியாது. நக்சல்பாரி இயக்கத்தின் ஒரு சாதாரணத் தொண்டன் எழுப்பும் அரசியல் கேள்விக்கு எந்த ஒட்டுப் பொறுக்கித் தலைவனாலும் பதில் சொல்ல முடியாது.

நக்சல்பாரிகளை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள ஆளும் வர்க்கம் அஞ்சுகிறது. எனவேதான் அச்சுறுத்துகிறது, அவதூறு செய்கிறது, மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முயற்சி செய்கிறது.

பெரியகுளம் சம்பவத்தையொட்டி நக்சல்பாரிகளுக்கு எதிராக அரசும் ஊடகங்களும் மேற்கொண்டு வரும் பொய்ப்பிரச்சாரத்தை நாம் முறியடிக்க முடியும். ஆனால், மேற்கூறிய பிரச்சாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லையென்றோ, மாவோயிஸ்டுகளின் ''ஆயுதப் போராட்டத்துக்கான' நியாயத்தை தமிழக மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள் என்றோ அதற்குப் பொருள் அல்ல. பெரியகுளம் சம்பவத்தையொட்டி மாவோயிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையே இதற்குச் சான்று கூறுகிறது.

''மாவோயிஸ்டுகளின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மறைத்து விட்டு அவர்களை வெறும் ஆயுத மோகம் கொண்ட தீவிரவாதிகளாகக் காட்ட ஊடகங்கள் முயற்சிக்கின்றன''... ''ஆயுதப் போராட்டத்திற்கான சிறிய தயாரிப்புகளையே பெரும் பயங்கரவாதமெனச் சித்தரித்துப் பயங்கரவாத பீதியை உருவாக்கி வருகிறது கருணாநிதி அரசு'' என்று கூறும் அந்த அறிக்கை, ''மாவோயிஸ்டுகள் யார், அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?'' என்று சுருக்கமாக விளக்குகிறது.

''மாவோயிஸ்டுகள் யார், அவர்களுடைய கொள்கை என்ன, அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்' என்பதையே மக்களுக்கு விளக்கிப் புரியவைக்க வேண்டும் என்ற நிலையில் இருக்கும் ஒரு அமைப்பு, ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கிவிட்டதாகக் கூறுவது சிறுபிள்ளைத்தனம் என்பதை விளக்கத் தேவையில்லை. தமிழகத்தில் கடந்த 7 ஆண்டுகளில் இவர்கள் சுற்றி வளைத்துக் கைது செய்யப்படுவது இது மூன்றாவது முறை.

பேருந்து எரிப்பு சம்பவத்தின் தொடர்ச்சியாக சனவரி, 2000இல் தோழர் ரவீந்திரனை போலீசு காவலில் வைத்து சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று விட்டு, அதனை மோதல் கொலை என்று புளுகியது போலீசு. அது தி.மு.க. ஆட்சிக்காலம். பின்னர், நவம்பர், 2002இல் தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டாரத்தில் 26 தோழர்கள் கைது செய்யப்பட்டு பொடாவில் சிறை வைக்கப்பட்டனர். தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டார் அது ஜெயலலிதா ஆட்சிக் காலம். இப்போது பெரியகுளம் சம்பவம்.

பெரியகுளத்தில் நடந்தது என்ன? என்பது பற்றி மாவோயிஸ்டு கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை எதுவும் கூறவில்லை. ஆனால், முன்னர் ரவீந்திரன் கொலை செய்யப்பட்டபோதும், ஊத்தங்கரையில் 26 பேர் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்ட போதும், மக்கள் ஆதரவு அடித்தளம் கூட இல்லாமல் ஆயுதக் குழுக்களைக் கட்டும் இவர்களுடைய சாகசவாதம் பற்றி நாம் விமரிசித்தோம். மாவோயிஸ்டுகள் கோபப்பட்டார்கள். தருமபுரி மாவட்டத்தில் ஏராளமான மக்களைத் திரட்டியிருப்பதாகவும், அம்மாவட்டம் ஒரு ஆயுதப்போராட்ட முனையாக உருவாகியிருப்பதாகவும் வலிந்து வாதாடினார்கள்.

தற்போது பெரியகுளம் பகுதி! இங்கே மாவோயிஸ்டு அமைப்பிற்கு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான செல்வாக்கு ஏதும் இல்லை. அன்றைய சம்பவத்தில் இவர்களுக்கு ஆதரவு கொடுத்ததற்காக அந்த வட்டாரத்து மக்கள் யாரும் கைது செய்யப்பட்டதாகவும் செய்தி இல்லை.

‘‘மலைத்தொடர்கள், காட்டுப் பகுதிகள், பாதுகாப்பான மறைவிடங்கள் கொண்ட காட்டுப்பகுதிகளாக இருந்தால் போதும்; அங்கே ஆயுதக்குழுக்களைக் கட்டிவிடலாம், ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கிவிடலாம்‘‘ என்று சிந்திக்கும் அளவுக்கு புவியியல்தான் இவர்களை வழிநடத்துகிறது; அரசியல் வழிநடத்துவதாகத் தெரியவில்லை. அரசியல் கண்ணோட்டம் ஏதுமற்ற இந்த அசட்டுத்தனமான நடவடிக்கையை இவர்கள் தம்முடைய சொந்த விவகாரமாகக் கருதிக் கொள்கிறார்கள். ‘‘நாங்கள் போராடுகிறோம், நாங்கள் தியாகம் செய்கிறோம், உனக்கென்ன நட்டம்?‘‘ என்ற சாகசவாதிகளுக்கே உரித்தான மனோபாவம்தான் இவர்களுடைய சிந்தனையை வழிநடத்துகிறது.

‘‘கம்யூனிஸ்டுகள் தம்முடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் மக்களுக்கு விளக்கமளிக்கக் கடமைப்பட்டவர்கள்‘‘ என்ற மிக எளிய உண்மை கூட, எதிரிகளின் அவதூறுப் பிரச்சாரம் தொடங்கிய பின்னர்தான் இலேசாக இவர்களுக்குப் புரியத் தொடங்குகிறது.

எனவேதான் ‘‘மாவோயிஸ்டுகள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?‘‘ என்று தங்களுடைய அறிக்கையில் மக்களுக்கு விளக்கம் தருகிறார்கள். ‘‘சிறப்புப் பொருளாதார மண்டலம், கோக், பெப்சி, ரிலையன்சு, குஜராத் படுகொலைகள்..‘‘ என்று ஒரு நீண்ட பட்டியலைக் கூறி ‘‘இத்தகைய பயங்கரவாதங்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்துவது பயங்கரவாதமல்ல. அத்தகைய மக்கள்

புரட்சிக்குத் தலைமை ஏற்கவே மாவோயிஸ்டுகள் ஆயுதம் ஏந்துகிறார்கள்''
என்கிறது அவர்களது அறிக்கை.

மேற்கூறிய பிரச்சினைகளுக்காக ஏற்கெனவே மக்கள் புரட்சி நடந்து கொண்டிருக்கிறதாம்! அதற்கு இவர்கள் தலைமை தாங்குகிறார்களாம்! புரட்சிக்குத் தலைமை தாங்கும் கம்யூனிஸ்டுகள், புரட்சியில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குத் ``தன்னிலை விளக்கம்' தந்து புரிய வைப்பதை நாம் இப்போதுதான் கேள்விப்படுகிறோம்.

சிறப்புப் பொருளாதார மண்டலமாக இருக்கட்டும், பிற தனியார்மய நடவடிக்கைகளாக இருக்கட்டும், அவற்றுக்கு எதிரான தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த அரசமைப்பின் வரம்புக்குள்ளேயே தத்தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பல்வேறு மக்கட்பிரிவினர் நடத்தும் இத்தகைய போராட்டங்கள் அவை போர்க்குணமிக்கவையாக இருப்பினும் பொருளாதாரப் போராட்டங்களே. மறுகாலனியாக்க எதிர்ப்பு என்ற அரசியல் கண்ணோட்டமோ, இந்த அரசமைப்பைத் தூக்கியெறிய வேண்டுமென்ற இலட்சியமோ அத்தகைய போராட்டங்களுக்கு இல்லை. அத்தகைய அரசியல் முழக்கங்களை முன்வைத்து மக்களைத் திரட்டுவதுதான் கம்யூனிஸ்டுகளின் கடமை. புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவது என்பதன் பொருள் இதுதான். இப்படிப்பட்ட புரிதலோ, இவ்வாறு மக்களைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையோ மாவோயிஸ்டுகளுக்கு இல்லை.

மாறாக, மக்களை அரசியல்படுத்த ஒரு விபரீதமான முறையைக் கடைப்பிடிக்கிறார்கள், மாவோயிஸ்டுகள். தத்தம் கோரிக்கைகளுக்காக மக்கள் போராடும்போது அவற்றில் கலந்து கொண்டு, அப்போராட்டங்களையே போலீசுடனான மோதலாக மாற்றினால், நிராயுதபாணிகளான மக்களோ போலீசின் அடக்குமுறையை எதிர்கொண்டு செய்வதறியாமல் திகைத்து நிற்பார்கள்; இப்படியாக ``அரசு என்பது அடக்குமுறைக் கருவி' என்ற உண்மையை மக்களுக்கு அனுபவபூர்வமாக புரிய வைத்து விடலாம் என்று நம்புகிறார்கள். இப்படியான செயல்கள் மூலம் அவர்கள் மத்தியிலிருந்து முன்னணியாளர்கள் சிலரைத் தமது ``ஆயுதக் குழுக்களுக்கு' வென்றெடுக்கிறார்கள். இதுதான் மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்ட மாவோயிஸ்டுகள் வகுத்திருக்கும் வழிமுறை.

சில சிறப்பான நிலைமைகளில் ஆந்திரம் மற்றும் தண்டகாரண்யாவின் பழங்குடி மக்கள் மத்தியில் தாங்கள் பெற்றிருக்கும் ஆதரவைக் காட்டி, அதனை மக்களின் ஆயுதப் போராட்டம் என்று சித்தரிக்கிறார்கள் மாவோயிஸ்டுகள். இதையே நாடு முழுவதற்கும் விரிவாக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

அந்த மக்கள் ஆதரவின் தன்மை என்ன? அது அரசியல் ரீதியான ஆதரவல்ல. ``நம்முடைய கோரிக்கைகளுக்காக நக்சல்பாரிகள் உயிரைக் கொடுக்கிறார்கள்'' என்ற அறவுணர்வின் அடிப்படையில் பழங்குடி மக்கள் வழங்கும் ஆதரவு. இத்தகைய ஆதரவு மக்களிடம் அரசியல் உணர்வை வளர்ப்பதில்லை. மாறாக, அதனை இல்லாமல் செய்து, மக்களை வெறும் பார்வையாளர்களாக்கி விடுகிறது.

சமீபத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக மாவோயிஸ்டுகள் அறிவித்த ``பந்த்'இல் ஆந்திரத்தில் எவ்வித சம்பவமும் இல்லை என்கின்றன பத்திரிகைச் செய்திகள். சட்டிஸ்காரிலோ தொலைபேசி கோபுரம் தகர்ப்பு, மின் கோபுரம் தகர்ப்பு என்பன போன்ற சில இராணுவ நடவடிக்கைகள்தான் நடந்துள்ளன. மக்களின் அரசியல் உணர்வை அமைப்பாக்கிக் காட்டுகின்ற போராட்ட வடிவமான ``பந்த்' என்ற நடவடிக்கை, செயலூக்கமிக்க பங்கேற்பின் மூலம் அவர்களுடைய வர்க்க உணர்வை இன்னும் மேம்பட்ட தளத்துக்கு உயர்த்தவேண்டிய ஒரு அரசியல் நடவடிக்கை, அதன் பொருளை இழந்து ஆளும் வர்க்கத்துக்கு ``தொந்திரவு தரும் நடவடிக்கையாக'ச் சுருங்கிவிட்டதை நாம் காண்கிறோம்.

ஆந்திரத்தில் தங்கள் அமைப்பிற்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக ஒப்புக் கொள்கிறார் மாவோயிஸ்டு கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர், தோழர் சோனு. (பீப்பிள்ஸ் மார்ச், ஜூலை, 2007) ஆனால், இந்தப் பின்னடைவு குறித்தும்கூட அவர்கள் இராணுவ ரீதியாகப் பரிசீலிக்கிறார்களேயன்றி, அரசியல்ரீதியாகப் பரிசீலிப்பதில்லை.

``அங்கே மாவோயிஸ்டுகள் ஏற்கெனவே நிலைநாட்டியிருப்பதாகக் கூறிக் கொள்ளும் ``மக்கள் அதிகாரத்தைப்' பாதுகாத்துக் கொள்ள மக்கள் போராடுகிறார்களா? ராஜசேகர் ரெட்டி அரசுடன் பேச்சுவார்த்தை நடந்தபோது இலட்சக்கணக்கில் திரண்ட மக்கள், பேச்சு வார்த்தையின்போதே போலி மோதல்

கொலைகளை அரசு தொடங்கியபோது, அதனை எதிர்த்து அவ்வாறு மக்கள் அணிதிரளாதது ஏன்? மாவோயிஸ்டுகளின் செல்வாக்கு மிகுந்த ஆந்திரத்துக்கு, கடுமையான மக்கள் எதிர்ப்புகள் இன்றி புஷ் விஜயம் செய்ய முடிவது எப்படி? சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஆந்திரம் முன்னிலை வகிப்பதும், நாயுடுவைக் காட்டிலும் தீவிரமாகப் புதிய தாராளவாதக் கொள்கைகளை ரெட்டி அமல்படுத்த முடிவதும், இவற்றுக்கெல்லாம் எதிராக நந்திக்கிராமுடன் ஒப்பிடத்தக்க வகையிலான மக்கள் போராட்டங்கள் எதுவும் ஆந்திரத்தில் நடைபெறாமல் இருப்பதும் ஏன்?'' என்பன போன்ற கேள்விகளை அவர்கள் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்வதில்லை.

``அடக்குமுறை இருப்பதால் மக்கள் திரளவில்லை, இல்லையென்றால் மக்கள் திரளுவார்கள்'' என்ற எளிய சூத்திரத்தைச் சொல்லி ஆறுதல் அடைந்து கொள்கின்றனர். வரலாறு நெடுகிலும் நடந்திருக்கின்ற மக்களின் அரசியல் ரீதியான எழுச்சிகளோ, நம் கண் முன்னே காஷ்மீரிலும், மணிப்பூரிலும் ஏன், நந்திக்கிராமிலும் அடக்குமுறைகளை மீறிக் கிளர்ந்தெழும் மக்கள் எழுச்சிகளோ கூட (அவை வேறு யார் தலைமையிலானவையாக இருந்தாலும்) மாவோயிஸ்டுகளுடைய கண்களைத் திறக்கவில்லை. ஏனெனில், அவர்களுடைய சுத்த இராணுவக் கண்ணோட்டம், மக்களின் அரசியல் முன்முயற்சி பற்றிக் கவலைப்படுவதில்லை. ``தமது ஆயுத நடவடிக்கைகளுக்கு உதவுவது' என்ற கோணத்தில் மட்டுமே மக்களின் ஆதரவு குறித்துக் கவலைப்படுகிறார்கள்.

``மாவோயிஸ்டுகளின் கொள்கைகளை மறைத்து விட்டு அவர்களை வெறும் ஆயுத மோகம் கொண்ட தீவிரவாதிகளாகக் காட்ட ஊடகங்கள் முயல்கின்றன'' என்று மாவோயிஸ்டு தமிழ் மாநிலக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. ஊடகங்கள் அவதூறு செய்வது இருக்கட்டும், உண்மை நிலவரமென்ன? `` ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதுதான் ஒரு அமைப்பை புரட்சிகர அமைப்பு என்று மதிப்பிடுவதற்கான முன் நிபந்தனை'' என்று மாவோயிஸ்டு அமைப்பினர் கொண்டிருக்கும் கருத்துக்கும், சிறுபிள்ளைத்தனமான பெரியகுளம் ஆயுதப்போராட்டத் தயாரிப்புக்கும் வேறென்ன பொருள்? ``புரட்சிகர அரசியலின் பௌதிக வடிவமே துப்பாக்கிதான்' என்று கருதும் சிந்தனைதானே இதில் வெளிப்படுகிறது!

``அரசியல் போராட்டத்தின் முதிர்ந்த வடிவம்தான் ஆயுதப்போராட்டம் என்பதையும், அரசியல் போராட்ட அனுபவத்தினூடாக ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்கள் உணரச் செய்ய வேண்டும்'' என்று நாம் கூறுவதையும்

மாவோயிஸ்டு அமைப்பினர் ஏளனத்துடன் மறுக்கிறார்கள். ``மக்கள் ஆயுதப்போராட்டத்துக்குத் தயாராகத்தான் இருக்கிறார்கள். சும்மா எத்தனை நாள் பேசிக்கொண்டே இருக்க முடியும்? நாம்தான் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்'' என்று அரசியலையே வீர வசனமாகச் சுருக்குகிறார்கள்.

மக்களைப் புரட்சிக்கு அணியமாக்குவதும், தலைமை தாங்குவதும்தான் கம்யூனிஸ்டுகளுக்குரிய பணியே அன்றி, மக்களின் சார்பாகப் புரட்சி செய்வதல்ல. புரட்சி என்பது ஆளும் வர்க்கங்களுடன் புரட்சியாளர்கள் ``ஒண்டிக்கு ஒண்டி' நடத்தும் சண்டையும் அல்ல. ஆனால், மக்களுக்கு விடுதலையை ``வழங்கப் பொறுப்பேற்றிருக்கும்' இடது சாகசவாதம் இப்படித்தான் கருதிக் கொள்கிறது.

வலது சந்தர்ப்பவாதிகளான போலி கம்யூனிஸ்டுகள் புரட்சிக்கு இழைக்கும் துரோகம் எளிதில் அம்பலமாகிவிடுகிறது. ஆனால், இடது சாகசவாதமும் புரட்சிக்கு இழப்பைத்தான் ஏற்படுத்துகிறது என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. சிறையையும் சித்திரவதையையும் சந்திக்கும் அந்தத் தோழர்களின் தனிப்பட்ட இழப்பாக மட்டுமே இது புரிந்து கொள்ளப்படுகிறது.

``பயங்கரவாதப் படையான அதிரடிப்படையை அனுப்புவதன் மூலம் மாவோயிஸ்டு புரட்சியாளர்களை மட்டுமல்ல, இச்சமூக அமைப்பை எதிர்த்துப் போராடும் அனைவரையும் மிரட்ட முயற்சிக்கிறார் கருணாநிதி'' என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது, மாவோயிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு.

உண்மைதான். ஆளும் வர்க்கத்தின் அடியாட்படையான அரசு எந்திரமும் அதிரடிப்படையும் மக்கள் அனைவரின் பொது எதிரி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், அந்த எதிரிப்படை தன்னை நாயகனாகச் சித்தரித்துக்கொள்ளவும், தன்னுடைய பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்திக் கொள்ளவும், புரட்சியாளர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் மாவோயிஸ்டுகளின் இந்த நடவடிக்கை எதிரிக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இது புரட்சிக்கு ஏற்படும் இழப்பு என்பதை இனிமேலாவது அவர்கள் புரிந்து கொள்ளப் போகிறார்களா என்பதுதான் கேள்வி.